Follow us

# தமிழன் THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ் : 27 சுபகிருது வருடம், ஆடி மாதம் 12ஆம் திகதி வியாழக்கிழமை (28.07.2022) ஹிஜ்ரி - 1443, துல்ஹஜ் - 28, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## சர்வதேச தலையீட்டுக்கு இடமளிக்க வேண்டாம்

### இராணுவம் வெளியேற வேண்டி வரும் என்கிறார் விமல் வீரவங்ச



யோ.தர்மராஜ்

போராட்டக்காரர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கோருவது போன்று சர்வதேச தலையீடு மற்றும் சர்வதேச இராணுவத்துக்கு இடமளித்தால், இராணுவ முகாம்களிலிருந்தும்...

03 பக்கம்



ஜனாதிபதி ரணிலை சந்தித்தார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங். பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியினைத் தீர்க்க ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து இதன்போது ஆராயப்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் தெரிவித்திருக்கிறார்.

# அவசரகாலச் சட்டம் நிறைவேறியது!

**ஆதரவாக 120 வாக்குகள்**

**எதிராக 63 வாக்குகள்**

**57 மேலதிக வாக்குகள்**

யோ.தர்மராஜ்

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை நாடாளுமன்றத்தில் 57 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது.

அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 63 வாக்குகளும் அளிக்கப் பட்டன.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக நாடாளுமன்ற சபை அமர்வு...

03 பக்கம்

## என்னைத் தாக்கியோரை தண்டித்து விடவேண்டாம்

### சபையில் குமார வெல்கம உருக்கம்



யோ.தர்மராஜ்

மே 9ஆம் திகதி என்னை தாக்கிய இளைஞர்கள் குறித்து நான் கவலையடைகின்றேன். குறைந்தது நான் இன்னும் 10 வருடங்கள் வாழ்ந்து இறந்துவிடலாம். ஆனால், என்னைத் தாக்கிய இளைஞர்கள் குறைந்தது 50 வருடங்களுக்கு மேல் வாழவேண்டும். எனவே, இவர்களை தண்டிக்க வேண்டாம்.

02 பக்கம்

## சர்வகட்சி அரசின் அமைச்சரவையில் ராஜபக்ஷக்கள் அங்கம் வகிக்கக்கூடாது

### முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா வலியுறுத்து



"புதிதாக அமையவுள்ள சர்வகட்சி அரசின் அமைச்சரவையில் ராஜபக்ஷக்கள் எவரும் அங்கம் வகிக்கக்கூடாது. அவர்களுடைய ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியும் ஆதிக்கம் செலுத்தக்கூடாது. அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கியவாறு சர்வகட்சி அரசு அமைவதே நாட்டுக்கு நல்லது" - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

02 பக்கம்



அவசரகாலச் சட்ட அமுலாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நேற்று கோட்டை ரயில் நிலையம் முன்பாக சிவில் சமூக செயற்பாட்டாளர்களால் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது. அந்த ஆர்ப்பாட்டம் நடந்த போது எரிபொருள் தீர்ந்து ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை தள்ளிக்கொண்டு செல்வதைக் காணலாம். (படப்பிடிப்பு - எஷான் தசநாயக்க)

## மக்களை ஒடுக்கும் முயற்சிகளை கைவிடக் கோருகிறார் பொன்சேகா



யோ.தர்மராஜ்

ஓகஸ்ட் 9ஆம் திகதி முழு நாட்டு மக்களுடன் கொழும்புக்கு வந்து, போராட்டத்தின் இறுதிக் கட்டத்தை வெற்றிகொண்டு, ஊழல்வாதிகள் மற்றும் ஊழல் அரசியல் கலாசாரத்திலிருந்து நாட்டை மீட்குமாறு போராட்டக்காரர்களிடம் கேட்டுக்கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அத்தோடு, பிடியாணை மற்றும் கைதுகள் மூலம் மக்களை ஒடுக்கும் முயற்சியை உடனடியாக...

02 பக்கம்

## தீவிரவாத கருத்துகளுக்கு செவிசாய்க்க முடியாது

### பிரதமர் தினேஷ் நேற்று சபையில் அறிவிப்பு



யோ.தர்மராஜ்

ஜனநாயக போராட்டக்காரர்களின் குரல்களுக்கு செவிசாய்க்க தற்போதைய அரசாங்கம் தயாராகவுள்ளது. அமைதியான போராட்டக்காரர்களுடன்...

02 பக்கம்

## பொருளாதார நெருக்கடி குறித்தான வழக்கிலிருந்து ரணில் விடுவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் தாக்கல் செய்யப் பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை விடுவிக்குமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

நிதி முறைகேடுகள் மற்றும் தவறான பொருளாதார மேலாண்மைக்கு காரணமானவர்களுக்கு...

02 பக்கம்

## அவசரகால தொடர் அமுலாக்கல் என்பது நாடு ஸ்திரமற்றது என்பதையே காட்டும்

### அரசை எச்சரித்தார் எதிர்க்கட்சி கொறடா கிரியெல்ல



யோ.தர்மராஜ்

சர்வதேச நாடுகள் எங்களை உன்னிப்பாக பார்த்துக்கொண்டிருக்கும் போது, போராட்டங்கள் இறுதிக் கட்டத்தை அடைந்து, 24 மணிநேரத்துக்குள் அங்கிருந்து வெளியேறுவதாகக் கூறியும், அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதால்...

02 பக்கம்

## போதைப்பொருள் வியாபார களமான போராட்டத் திடல்

### அமைச்சர் பிரசன்ன காட்டம்



யோ.தர்மராஜ்

காலிமுகத்திடலிலுள்ள அமைதியான போராட்டக்காரர்களை முன்னிறுத்தி, போதைப்பொருள் பாவனையாளர்கள், பாதாள குழுக்கள் மற்றும் கொள்ளையர்களே தற்போது போராட்டத்தை வழிநடத்துகின்றனர்.

02 பக்கம்



**உஷ்**

விரைவில் தேர்தலொன்றுக்கு செல்வது நல்லதென ஜனாதிபதியிடம் கூறினாராம் ஜோதிடர் ஒருவர்.

ஆனால், இப்போதுள்ள நிலையில் தேர்தலொன்றுக்கு செல்லமுடியாதென திட்டவட்டமாக கூறினாராம் ஜனாதிபதி.

தேர்தலொன்றுக்கு செல்லமுன்னர் கட்சியை பலப்படுத்துவதில் குறியாக இருக்கிறாராம் ரணில்.

## ஐ.தே.கட்சி தேசியப்பட்டியல் எம்.பியாக வஜிர பொறுப்பேற்பு



யோ.தர்மராஜ்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதையடுத்து, வெற்றிடமான அக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..

போராட்டக்காரர்கள ஒண்டும் செய்யாதேங்கோ எண்டு வெல்கம சொல்லுறத பார்த்தா, எதாவது செய்யுங்கோ எண்டு சொல்லுறமாதிரியே கிடக்குது...





## மக்களை ஒடுக்கும்...

கைவிடுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) ஆரம்பமான சபை அமர்வில் அவசரகாலச் சட்டம் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் உயர் தேவை இருந்தால் மாத்திரமே அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்த வேண்டும். ஆனால், தற்போது, அதற்கு எதிராகவே அவரசகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மக்களை பாதுகாக்காது, அவர்களை ஒடுக்கி, ஆட்சியாளர்களை பாதுகாக்கவே இந்த அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மனித உரிமைகளை மதிக்கும் உலகத்திலேயே நாங்கள் வாழ்கின்றோம். எதிர்கால தரப்பினரின் எதிர்பார்ப்புகளை ஒடுக்கி, நாட்டை ஆட்சி செய்யவே முயற்சிக்கின்றனர்.

இலங்கை தற்போது வாழ்வதற்கு பொருத்தமில்லாத நாடாகவுள்ளது. வாழ்க்கை சுமை அதிகரிப்பு, எரிபொருள், எரிவாயு வரிசையில் காத்திருப்பு, உயிரிழப்பு, மின்வெட்டினால் உற்பத்திகள் பாதிப்பு போன்று பல நெருக்கடிகளால் எவ்வாறு வாழ்வது. இதனை பொறுக்க முடியாது வீதிக்கு வந்த மக்களை பயங்கரவாதிகள் என கூச்சலிடுவது பொருத்தமற்றது.

தற்போதைய அரசாங்கத்திலுள்ளவர்களின் மோசடிகளினாலேயே நாடு வங்குரோத்து அடைந்தது என்பது மக்களுக்கு தெரியும். எனினும், அதே ராஜபக்ஷக்கள் தங்களுடைய தரப்பை வைத்து ஆட்சி அதிகாரத்தை கொண்டுச் செல்ல முயற்சிக்கின்றனர். இதனாலேயே நாடு முழுவதிலும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 69 இலட்ச வாக்கு பெற்ற தலைவர் வீட்டுக்கு அனுப்பப்பட்டும் ஆட்சியாளர்களுக்கு யதார்த்தம் புரியவில்லை. தற்போதைய ஜனாதிபதி மக்களால் புறக்கணிக்கப்பட்டவர். எனினும், அவர் இராணுவம் மற்றும் பொலிஸாரைக் கொண்டு மக்களை ஒடுக்குவதற்கு முயற்சிக்கின்றார்.

போராட்டம் என்பது காலிமுகத்திடலுக்குள் வரையறுக்கப்பட்டது என்றே ஜனாதிபதி நினைக்கின்றார். ஆனால், முழு நாட்டு மக்களும் போராட்டத்தில் இருக்கின்றனர். இராணுவம் மற்றும் பொலிஸாரில் 95வீதமானவர்களும் போராட்டத்துடனே இணைந்துள்ளனர். போராட்டத்தை அடக்கச் செல்லும் எந்தவொரு இராணுவத்தினரும் இளைஞர்களை தாக்குவதற்கோ அல்லது ஒடுக்குவதற்கோ முயற்சிக்க வேண்டாம். வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியாது வீதிக்கு இறங்கிய மக்களை ஒடுக்க முயற்சிப்பது கீழ்த்தரமான செயற்பாடாகும். வரலாற்றில் இராணுவம் பெற்ற நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த வேண்டாம் என இராணுவத்தினரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

இதேவேளை, பழைய விடயங்களை மறந்துவிட்டு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுமாறு போராட்டக்காரர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களுக்காக உங்களுக்கிடையில் அமைதியை சீர்குலைத்துக்கொள்ள வேண்டாம்.

எனவே, அடுத்த மாதம் 9ஆம் திகதி முழு நாட்டு மக்களுடன் கொழும்புக்கு வந்து, போராட்டத்தின் இறுதிக்கட்டத்தை வெற்றிக் கொண்டு, ஊழல்வாதிகள் மற்றும் ஊழல் அரசியல் கலாசாரத்திலிருந்து நாட்டை மீட்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தற்போதைய நாடாளுமன்றத்தில் ஊழல் அரசியல் கலாசாரமே இருப்பதால், ஒரு சில ஆட்சியாளர்களை விரட்டிவிட்டு, நாட்டை நாடாளுமன்றத்திடம் ஒப்படைப்பதால் எவ்வித நன்மையும் இல்லை என்பதை போராட்டக்காரர்கள் புரிந்துகொண்டுள்ளனர். புதிய கூட்டணியினாலேயே நாட்டை கட்டியெழுப்ப முடியும். எனவே, இதனை புரிந்துகொண்டு ஒரே நோக்கத்தில் வருமாறு போராட்டக்காரர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

மக்களை ஒடுக்க முயற்சிக்கும் ஆட்சியாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு மக்களிடமும் வெளிநாட்டிலுள்ளவர்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன். நிதி உதவிகளை வழங்க வேண்டாம். சட்டவிரோத கைதுகளை எதிர்க்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். வியாபாரிகளும் போராட்டங்களுக்காக உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பிடியாணை மற்றும் கைதுகள் மூலம் மக்களை ஒடுக்கும் முயற்சியை உடனடியாக கைவிடுமாறு ஜனாதிபதியிடம் கேட்டுக்கொள்கின்றேன். விமான நிலையத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட ஒருவரை கைது செய்த விதம் வெட்கமடைய வேண்டும். அதனை வன்மையாக கண்டிக்கின்றோம் - என்றார்.

## என்னைத் தாக்கியோரை...

அவர்களின் எதிர்காலம் சீர்குலைந்துவிடும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) ஆரம்பமான சபை அமர்வில் அவசரகாலச் சட்டம் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வேட்பாளராக கொண்டுவரும் போது, அவரை கொண்டுவர வேண்டாம் என கூறிய முதல் மனிதன் நான். 69இலட்சம் மக்கள் அவருக்காக வாக்களித்தனர். எனினும், அவரால் நாட்டை ஆட்சி செய்ய முடியாது என எனக்கு தெரியும். நான் 40 வருடங்கள் அரசியலில் இருக்கின்றேன். 82 -83 கலவரங்களையும் கண்டுள்ளேன். அதனை யார் செய்தது, எவ்வாறு செய்தனர் என்பதும் எனக்கு தெரியும். எனவே, பயங்கரவாதம் எனக்கு நன்றாகவே தெரியும்.

இன்று இளைஞர்களை முன்னிறுத்தி, அவர்களின் பின்னால் பயங்கரவாதத் தலைவர்களே இருக்கின்றனர். அன்றிருந்த தலைவர்களின் ஆவி இன்று இருக்கின்றது. அவர்கள் இளைஞர்களை முன்னால் தள்ளுகின்றனர். இன்று மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். வரிசைகளில் மக்கள் உயிரிழக்கின்றனர். அது எனக்கு பெரும் கவலையளிக்கின்றது. இதனாலேயே கோட்டாபயவால் நாட்டை ஆள முடியாது என அன்றே கூறினேன்.

அன்று, நான் வீட்டுக்குச்செல்லும்போது கொட்டாவ பகுதியில் என்னை தடுத்து நிறுத்தி, 300 – 400 பேர் வரை என்னுடைய காரை சுற்றி தாக்க ஆரம்பித்தனர். என்னுடைய சாரதியின் கண்ணாடிக்கு தாக்குதல் நடத்தினர். என்னுடைய மெய்ப் பாதுகாவலர்கள் என்னை தாக்க வேண்டாம் எனக் கூறியபோதிலும் அவர்களை தாக்கி, இழுத்துத்தள்ளினர். தடியால் எனக்கு கடுமையாக தாக்கினர்.

35 வயதுடைய சிலர் என்னை தாக்க வேண்டாம் எனக் கூறினர். ஆனால், அங்குள்ள இளைஞர்கள் இந்த 225 பேரையும் அடித்துவிரட்ட வேண்டும் எனக் கூறி, என்னை கடுமையாக தாக்கினர். பின்னர் என்னுடைய வாகனத்தையும் தீயிட்டு கொளுத்தினர். தீ வைப்பதற்கு முன்னர் நான் வாகனத்துக்குள் சிக்கியிருந்தேன். என்னை இழுத்தபோதே, வாகனம் தீ பிடித்தது.

என்னை வெளியில் இழுத்து தாக்கும் போது, என்னுடைய சாரம் மற்றும் சட்டையும் கிழித்தெறியப்பட்டது. நான் கீழ் காற்சட்டை அணிந்திருந்ததால், அதனுடன் நான் வீதியில் விழுந்தேன். திரும்பிப் பார்க்கும்போது என்னுடைய வாகனம் தீ பிடித்து எரிந்தது. இரண்டு நிமிடங்கள் தாமதமாகியிருந்தால் வாகனத்துடனே எரிந்திருப்பேன்.

பின்னர், அங்கிருந்து களுத்துறை இளைஞர் ஒருவர் என்னை கண்டதும், இவர் எங்களுடைய வெல்கம சேர் எனக் கூறி என்னை ஒரு முச்சக்கரவண்டியில் ஏற்றி வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார். அன்று நான் மட்டுமல்ல, 96பேருக்கு தாக்குதல் நடத்தியிருந்தனர். அன்று எனக்கு தாக்குதல் நடத்துவதற்கான காரணம் என்ன? அன்று நான் இறந்திருந்தால், சோகத்தை தெரிவித்திருப்பார்கள். மறுநாள் மறந்திருப்பார்கள். எனவே, இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்க முடியாது.

எனக்கு தாக்குதல் நடத்திய இளைஞர்கள் குறித்து கவலையடைகின்றேன். நான் இன்னும் 10வருடங்களில் இறந்துவிடலாம். ஆனால், இந்த இளைஞர்களுக்கு தண்டனை வழங்க வேண்டாம். அவர்களின் 50 வருட வாழ்க்கை சீர்குலைந்துவிடும். அவர்களுக்கு பின்னால் பயங்கரவாதத் தலைவர்களே இருக்கின்றனர். அவர்களுக்கு தலைதூக்க இடமளிக்க முடியாது.

இன்று நாங்கள் சிறந்த தலைவரை தெரிவு செய்துள்ளோம். டலஸ் அழகப்பெரும வருகை தந்திருந்தால், பயங்கரவாதத் தலைவர்கள் கூறுவதற்கு ஏற்றவாறே செயற்பட்டிருக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் பேச வரும் எந்தவொரு பயங்கரவாதத் தலைவரும் உங்களுடன் இல்லை. அவர்கள் அனைவரும் நடித்துக்கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு நண்பர்கள் என யாரும் இல்லை. போலியான விடயங்களுக்கு ஏமாற வேண்டாம் - என்றார்.

## சர்வகட்சி அரசின்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது, "முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இருவரையும் மக்கள் விரும்பவில்லை. இதனால்தான் மக்கள் நாடெங்கும் போராட்டம் நடத்தினார்கள்.

புதிய ஜனாதிபதியை நாடாளுமன்றம் தெரிவு செய்துள்ளது. புதிய பிரதமரை ஜனாதிபதி தனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தெரிவு செய்துள்ளார்.

இந்தநிலையில், இடைக்கால சர்வகட்சி அரசு அவசியம். தனியொரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. அனைவரது ஒத்துழைப்பும் ஆலோசனைகளும் மிகவும் அவசியம். ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என்ற பேதம் இல்லாமல் சர்வகட்சி அரசு அமையவேண்டும்.

இதேவேளை, புதிய பிரதமர் தொடர்பில் சர்வகட்சி அரசுதான் தீர்மானிக்க வேண்டும்" - என்றார்.

## போதைப்பொருள் வியாபார...

இந்தப் போராட்டக்களம் இன்று போதைப்பொருள் வியாபாரத்துக்கான களமாக மாறியுள்ளது. எனவே, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பதவி விலக வேண்டும் என்ற அவர்களின் நோக்கம் நிறைவேறியுள்ள நிலையில், தொடர்ந்தும் போராட்டம் நடத்துவதில் எவ்வித அர்த்தமும் இல்லை என ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) ஆரம்பமான சபை அமர்வில் அவசரகாலச் சட்டம் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

போராட்டக்காரர்கள் 'கோட்டா கோ ஹோம்' என்ற நிலைப்பாட்டிலேயே போராட்டத்தை நடத்தினர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியிலிருந்து விலகும் வரை போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாகக்கூறியே போராட்டத்தை தொடர்ந்தனர். அதற்கமைய, கோட்டாபய ராஜபக்ஷ பதவிவிலகி, அரசியலமைப்புக்கு அமைய புதிய ஜனாதிபதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எனினும், 'கோட்டா கோ ஹோம்' போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் காலிமுகத்திடலில் இருக்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்ற அவர்களின் நோக்கம் நிறைவேறியுள்ள நிலையில், தொடர்ந்தும் போராட்டம் நடத்துவதில் எவ்வித அர்த்தமுமில்லை. நோக்கம் நிறைவேறியுள்ளதாயின் அவர்கள் போராட்டத்தை கைவிட்டு, அங்கிருந்து வெளியேறியிருக்க வேண்டும்.

இந்தப் போராட்டக்களம், நாட்டை சீர்குலைத்தல், ஆட்சியாளர்களை விரட்டியடித்தல் மற்றும் ஆட்சியை கவிழ்க்கும் சூழ்ச்சிகளை நிறைவேற்றும் களமாக இருக்கக்கூடாது. அமைதியான போராட்டக்காரர்களை முன்னிருத்தி, போதைப்பொருள் பாவனையாளர்கள், பாதாள குழுக்கள் மற்றும் கொள்ளையர்களே, தற்போது போராட்டத்தை வழிநடத்துகின்றனர். அவர்களுக்கு சில அரசியல் கட்சிகளின் தலைவர்களும் பின் இருந்து உதவிகளை வழங்கினர்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் இருந்து பாதுகாப்பு வேலியை முற்றாக உடைத்துள்ளனர். இவற்றுக்கு யார் பொறுப்பேற்பது? போராட்டக்காரர்களுக்காக பேசும் அரசியல் கட்சித்தலைவர்கள் இதற்கு பொறுப்பேற்பீர்களா? நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென போராடியவர்கள், ஜனாதிபதி மாளிகையிலுள்ள சித்திரங்களில் கையொப்பமிட்டுள்ளனர். இவர்களா நாட்டை மாற்றப்போகின்றனர்.

'கோட்டா கோ ஹோம்' என்ற பதாதையை மாற்றி, மற்றொரு பெயரை இணைத்து போராடுவதற்கு முயற்சிக்கின்றனர். மற்றொரு ஆட்சியாளரையும் விரட்டுவதற்கு இந்த போராட்டக்களத்தை பாவிப்பதற்கு போராட்டக்காரர்களுக்கு எவ்வித உரிமையுமில்லை.

காலிமுகத்திடல் என்பது பொதுச்சொத்தாகும். இது நகர அபிவிருத்திக்கான இடமாகும். இங்கு போராடுபவர்கள் அமைதியான முறையில் போராடுவதாகக் கூறினாலும் சில சட்டவிரோத செயற்பாடுகள் மற்றும் அமைதியை மீறி சில சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

போராட்டக்களத்துக்கு அழைக்கப்படும் மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்க வருவோரினால் முன்னெடுக்கப்படும் சில சில சம்பவங்களை அங்குள்ள போராட்டக்காரர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. மே 9 மற்றும் ஜூலை 9 சம்பவங்களும் காலிமுகத்திடல் போராட்டக்களத்தை முன்னிலையாகக் கொண்டே இடம்பெற்றன. இதனால், பல பொதுச் சொத்துகள் சேதமாக்கப்பட்டுள்ளன. தற்போது, போதைப்பொருள் பாவனையாளர்களின் இடமாக மாறியுள்ளதுடன், பல கொள்ளை சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்கள் இந்த போராட்டக்களத்தை பாதுகாப்பு தளமாக பாவித்துவருகின்றனர். தங்களுடைய போதைப்பொருள் வியாபாரத்துக்கு சிறந்த இடமாக காலிமுகத்திடலை பயன்படுத்தி வருகின்றனர். இதனால், பொலிஸார் அங்குச்சென்றால் அவர்களை விரட்டுகின்றனர்.

எனவே, அவசரகாலச் சட்டத்தை நாட்டின் பாதுகாப்புக்காகவே கொண்டுவருகின்றோம். தற்போதுள்ள நிலைமையின் ஆபத்தை புரிந்துகொள்ளுங்கள். நிலைமையை கட்டுப்படுத்தவே அவசரகாலச் சட்டத்தை கொண்டுவருகின்றோம். மக்களுக்கிருந்த நெருக்கடியால் மக்கள், போராட்டத்துடன் இணைந்திருந்தனர். ஆனால், மோசமான நடத்தையை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. இன்று, காலிமுகத்திடலில் போதைப்பொருள் பாவனையாளர்களே இருக்கின்றனர். எனவே, பொறுப்பற்றவர்களை அங்கிருந்து வெளியேற்றி, நாட்டின் நிலைமையை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். எல்லாரும் போராட்டக்காரர்களுக்கு அச்சம். ஆனால், நிலைமையை கட்டுப்படுத்தவில்லையேல் உங்களுக்கும் எங்களுக்கும் இந்த நாட்டில் வாழ முடியாது – என்றார்.

## பொருளாதார நெருக்கடி...

எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவிடக்கோரி இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, அவருக்கு ஜனாதிபதி விதிவிலக்கு பொருந்தாது என்பதால், இந்த மனுக்களில் பிரதிவாதியாக அவரை பெயரிட உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது. இதன்படி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதிக்கு முன் நோட்டீஸ் வழங்குமாறு உயர்நீதிமன்ற பதிவாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கையின் நீச்சல் வீரரும் பயிற்சியாளருமான ஜூலியன் பொலிங், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திர ஜயரத்ன, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் மற்றும் ஜெஹான் கனக ரெட்ன உள்ளிட்டவர்கள் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் டபிள்யூ.டி.லக்ஷ்மன் மற்றும் நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல உள்ளிட்டவர்கள் இதில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மனுவில் பிரதிவாதியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவருக்கு எதிராக மனுத் தாக்கல் செய்ய மனுதாரர்கள் எதிர்பார்க்கவில்லை என மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாந்தக ஜயசுந்தர நீதிமன்றில் அறிவித்தார். இதன்படி நீதிமன்ற நடவடிக்கைகளில் இருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடுவிக்குமாறு அவர் உயர் நீதிமன்றத்திடம் அறிவித்தார்.

இதனை கருத்திற்கொண்டு, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம், ஜனாதிபதி விக்கிரமசிங்கவிற்கு எதிரான நீதிமன்ற நடவடிக்கைகளை நிறுத்த தீர்மானித்ததுடன், இந்த அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில் இருந்தும் அவரை விடுவித்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் பெரேரா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி எராஜ் டி சில்வா ஆகியோர் ஆஜராகினர்.

சட்டமா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே ஆஜரானார்.

## தீவிரவாத கருத்துகளுக்கு...

இணைந்து பணியாற்ற தயாராக இருந்தாலும், தீவிரவாதக் கருத்துகளுக்கு செவிசாய்க்க முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) ஆரம்பமான சபை அமர்வில் பிரதமராக ஆற்றிய தன்னுடைய கன்னி உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெவ்வேறு அரசியல் நிலைப்பாடுகள், நோக்கங்கள் இருந்தாலும் ஜனநாயக நாடாளுமன்ற முறையை பாதுகாத்து, நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்வதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். அரசியலமைப்புக்கு உட்பட்டு, நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தருணமிது என்பதை பிரதமராக மீண்டும் கூறிக்கொள்கின்றேன். நாடாளுமன்றத்திலுள்ள அனைவரும் தற்போதுள்ள நெருக்கடியை வெற்றிக்கொள்வதற்காக ஒன்றிணைவார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

எங்களுடைய நிதி மற்றும் பொருளாதார நெருக்கடிகள் உக்கிரமடைந்த நிலையில், அதனை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் போது மக்களின் பாரிய எதிர்ப்புகள் மற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதனை நிவர்த்தி செய்வதற்காக அரச இயந்திரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த நாடாளுமன்றத்திலுள்ள இரு தரப்பினரும் முன்வைத்த யோசனைகளை முன்வைத்து, அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலமைப்பு மாற்றத்தை கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். அதேபோன்று, நாடாளுமன்றத்தில் தெரிவு குழுக்கள் முறைமையை உருவாக்குவதற்கு நாங்கள் உறுதியளிக்கின்றோம்.

நாட்டில் பணம் படைத்தவர்களுக்கும் பணமில்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி பாரியளவில் அதிகரித்துள்ளது. இது பாரதூரமான விடயமாகும். இது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்பதோடு, அதற்கான விசேட வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

விவசாயிகளே எங்கள் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகும். இவர்களை பாதுகாக்க வேண்டியதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும். மேலும், நாட்டில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கும் அழைப்புவிடுக்கின்றோம். உரம் தொடர்பாக நாங்கள் எதிர்நோக்கிய நெருக்கடிக்கு நிவாரண முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது. உரம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட கொள்கைத்திட்டத்தை மாற்றத்துக்குட்படுத்தி வருகின்றோம்.

இதேவேளை, எரிவாயு தொடர்பான நெருக்கடிக்கு தீர்வு காணப்பட்டுள்ளது. அதேபோன்று, மின்வெட்டு தொடர்பான நெருக்கடியையும் தீர்க்க முடியும். எனினும், நாட்டில் சில சில இடங்களில் எரிபொருள் நெருக்கடிகள் காணப்படுகின்றன. இதனை தீர்ப்பதற்கு நாங்கள் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். மேலும், வருமானம் குறைந்தவர்களின் உணவுப் பிரச்சினைக்கும் நிவாரண ரீதியில் முன்னிருந்து திட்டங்களில் மாற்றங்களை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளோம்.

மக்களின் ஜனநாயகப் போராட்டக்காரர்களின் குரல்களுக்கு செவிசாய்க்க அரசாங்கம் தயாராகவுள்ளது. அமைதியான போராட்டக்காரர்களுடன் இணைந்து பணியாற்ற ஆர்வமாக இருந்தாலும், தீவிரவாத கருத்துகளுக்கு செவிசாய்க்க முடியாது. இலங்கை எதிர்காலத்தில் சவாலான காலங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான தீர்வுகளை நாடாளுமன்றமே வழங்க முடியும்.

வன்முறையில் ஈடுபடுவதையோ அல்லது நாடாளுமன்றத்தை தாக்குவோம் என அச்சுறுத்துவதையோ ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுவாக இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உதாசீனம் செய்யப்போவதில்லை. தற்போதுள்ள சவால்களை சமாளிக்க இளைஞர்கள், நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.

தற்போது நிலவும் நிதி நெருக்கடியை தீர்க்க நடவடிக்கை எடுத்துவருகின்றோம். எங்களின் நட்பு நாட்டவர்கள் மற்றும் சர்வதேச பங்காளிகளின் ஆதரவையும் நாடியுள்ளோம் - என்றார்.

## அவசரகால தொடர்...

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளவிருந்த ஒப்பந்தம் சில மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சியின் பிரதாம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அத்தோடு, அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தினால் நாடு ஸ்திரமற்ற நிலையில் இல்லை என்ற விடயமே சர்வதேசத்துக்குச் செல்லும். நாடு தொடர்ந்தும் இவ்வாறு சென்றால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் நிதி அடுத்த வருடம் நடுப்பகுதி வரை கிடைக்க வாய்ப்பில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) ஆரம்பமான சபை அமர்வில் அவசரகாலச் சட்டம் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அவசரகாலச் சட்டம் தொடர்பாக வரலாற்று சம்பவங்களைக் கூறினாலும் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள விதிமுறைகளானது மிக ஆபத்தானது. அதன்படி, இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரினால் பிடியாணையின்றி எந்தவொரு நபரையும் கைது செய்ய முடியும். வீடுகள் மூடியிருந்தாலும் உடைத்துக்கொண்டு வீட்டின் உள்நுழைய முடியும். சொத்துகளை கைப்பற்ற முடியும். எனவே, இவ்வாறான ஆபத்தான சட்டங்களுக்கு எதிராகவே நாங்கள் தொடர்ந்து கருத்து தெரிவித்துவருகின்றோம். நாங்கள் சர்வதேசங்கள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை போன்றவற்றுடன் கொடுக்கல் வாங்கல்களை முன்னெடுக்கும் போது, இவ்வாறான ஆபத்தான சட்டங்களை நீக்குமாறே எப்போதும் கோருகின்றனர்.

ஒருவர் கைது செய்யப்பட்டால், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாது, 90 நாட்கள் தடுத்துவைத்திருக்க முடியும். அதனை ஒரு வருடமாகவும் மாற்றிக்கொள்ள முடியும். 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்கு பின்னர் நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படவில்லை. அவ்வாறாயின், தற்போது அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தேவை என்ன? சர்வதேச நாடுகள் எங்களை உன்னிப்பாக அவதானித்துக்கொண்டிருக்கும்போது, அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தினால் நாடு ஸ்திரமற்ற நிலையில் இல்லை என்ற விடயமே சர்வதேசத்துக்குச் செல்லும்.

அதேபோன்று, போராட்டக்களத்தின் மீது தாக்குதல் நடத்தியபோது, போராட்டம் அமைதியான முறையிலேயே முன்னெடுக்கப்பட்டது. 24மணித்தியாலத்துக்குச் செல்வதாக கூறியபோதிலும், அவர்கள் மீது தாக்குதல் நடத்தி எங்கள் நாட்டை பாதிப்புக்குள் தள்ளியுள்ளனர். இவர்களுக்கு பாடம் புகட்ட வேண்டும் என்ற எண்ணம், வீடுகள் எரிக்கப்பட்ட உறுப்பினர்களின் மனதில் தோன்றலாம். ஆனால், எங்களை நாட்டை சர்வதேச நாடுகள் பார்த்துக்கொண்டிருக்கும் போது, இந்த தாக்குதல் ஊடாக எங்களுடைய நாட்டை பாதிப்புக்குள் தள்ளியுள்ளனர்.

ஜனாதிபதியுடன் நாங்கள் இணைந்து செயற்பட்டபோது, சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டும் எனக் கூறுவார். ஆனால், அதிகாரத்துக்கு வந்து 24 மணித்தியாலத்துக்குள் தாக்குதல் நடத்தி நாட்டை பாதிப்புக்குள் தள்ளியுள்ளார். பல நாடுகள் குறித்த தாக்குதலை கண்டித்திருந்தன. ஆனால், உறுப்பினர்களின் வீடுகள் எரிக்கப்பட்டபோது, டுவிட்டர் பதிவை பதிவிடவில்லை என தற்போது ஆளுந்தரப்பு உறுப்பினர்கள் தூதுவர்களை தூற்றுகின்றனர். இவர்களுக்கு சர்வதேச தொடர்புகள் தெரியவில்லை. உள்நாட்டில் இடம்பெறும் சம்பவங்களுக்கு தலையிடமாட்டார்கள். அரசாங்கம் செய்யும் தவறுகளையே அவர்கள் கவனத்தில் கொள்வார்கள்.

இந்தநிலையில், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளவிருந்த ஒப்பந்தம் சில மாதங்களுக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாக எங்களுக்கு அறிய கிடைத்தது. இதுவே, நாட்டை பாதிப்புக்கு தள்ளும் செயற்பாடாகும். போராட்டங்கள் இறுதி கட்டத்துக்கு வந்திருந்தன. தாக்குதல் நடத்தாது பொறுமையாக இருந்திருக்க வேண்டும். எனவே, புதிய ஜனாதிபதி புதிய பயணத்தை ஆரம்பிப்பார் என எதிர்பார்த்த போது, அதனை தகர்த்தெறிந்துள்ளார். இந்த நிலையில், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கிடைக்கும் நிதி மேலும் தாமதமாகும். குறிப்பாக, நாடு தொடர்ந்தும் இவ்வாறே சென்றால் அடுத்த வருடம் நடுப்பகுதி வரை நிதி கிடைக்காது. சர்வதேச நாணய நிதியத்தின் நிதி கிடைக்கும் வரை எங்களுக்கு கைமாற்றாக யாரும் நிதி தரமாட்டார்கள் - என்றார்.

## ஐ.தே.கட்சி தேசியப்பட்டியல்...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) இடம்பெற்ற சபை அமர்வின்போதே சபாநாயகர் முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பொதுத் தேர்தலில் படும் தோல்வியை சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சி, நாடளாவிய ரீதியில் பெற்றுக்கொண்ட வாக்குகளுக்கு அமைய கிடைக்கப்பெற்ற தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு சுமார் ஒரு வருடத்துக்கு பின்னர் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமிக்கப்பட்டார்.

இதனையடுத்து, நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியால் அரசாங்கத்தில் இணைந்து பிரதமராக தெரிவு செய்யப்பட்டதோடு, கடந்த 14ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதையடுத்து, பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டார்.

இதனையடுத்து, கடந்த 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற ஜனாதிபதிக்கான வாக்கெடுப்பில் 134 வாக்குகளை பெற்றுகொண்ட பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து, நாட்டின் 8ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக கடந்த 21ஆம் திகதி பதவியேற்றுக்கொண்டதோடு, தன்னுடைய நாடாளுமன்ற எம்.பி பதவியையும் இராஜினாமா செய்வதாக நாடாளுமன்ற செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

இதனையடுத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் கடந்த வாரத்தில் கட்சி மட்டத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைக்கு அமைய, அக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தனவை நியமிப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

அதற்கமைய, தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டு, சபாநாயகர் தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமான சபை அமர்வின்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

# நாடாளுமன்ற சபை முதல்வராக சுசில் பிரேமஜயந்த நியமனம்





நாடாளுமன்றத்தின் புதிய சபை முதல்வராக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோன்று, நாடாளுமன்ற ஆளுங்கட்சியின் முதற்கோலாசானாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனங்களுக்கான நியமனக் கடிதங்கள் பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் நாடாளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து நேற்று (27) வழங்கப்பட்டன.

இலங்கை நாடாளுமன்றத்தின் 18ஆவது சபை முதல்வரான கலாநிதி சுசில் பிரேமஜயந்த, நுகேகொட புனித ஜோன்ஸ் கல்லூரியில் கல்வி கற்றுள்ளதுடன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீட பட்டதாரியாவார். 1984இல் உயர்நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ள அவர், 1991ஆம் ஆண்டில் கோட்டே மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டு முதல் முறையாக அரசியலுக்குப் பிரவேசித்தார். 1993இல் மேல் மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்ட அவர், 1995இல் முதலமைச்சராக தெரிவுசெய்யப்பட்டார்.

2000ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட சுசில் பிரேமஜயந்த, தற்போதைய அரசாங்கத்தில் கல்வி அமைச்சுப் பதவியை வகிப்பதுடன், இதற்கு முன்னர் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி, சுற்றாடல் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, பெற்றோலிய தொழிற்றுறை, மின்சக்தி மற்றும் வலுசக்தி போன்ற அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளார். அவர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராகவும் நீண்டகாலம் சேவையாற்றியுள்ளார்.

ஆளுங்கட்சியின் முதற்கோலாசானாக நியமிக்கப்பட்டுள்ள பிரசன்ன ரணதுங்க, இதற்கு முன்னரும் அதே பதவியில் பணியாற்றினார். தற்போதைய அரசாங்கத்தின் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக உள்ள அவர் இதற்கு முன்னர் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சராக பணியாற்றியுள்ளார். ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவரான அவர், இதற்கு முன்னர் மேல் மாகாண சபையின் முதலமைச்சராகவும் சேவையாற்றியுள்ளார்.

# ஆசிரியையிடம் திருமண ஆசைகாட்டி 23இலட்சம் ரூபா பணம் கொள்ளை

## சந்தேகநபரைத் தேடி மொனராகலை பொலிஸார் விசாரணை

(பதுளை நிருபர்)

திருமண ஆசைகாட்டி, ஆசிரியை ஒருவரிடம் பணமோசடி செய்த நபரொருவரைக் கைது செய்ய மொனராகலை பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். பிபிலைப் பகுதியின் யல்வெல பகுதியைச் சேர்ந்த ஆசிரியை ஒருவரிடம் 23இலட்சத்து 30ஆயிரத்து 600 ரூபா பணத்தை, இரு பிள்ளைகளின் தந்தையொருவர் மோசடி செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

32வயதான ஆசிரியை, பண்டாரவளையில் இயங்கும் தனியார் காப்புறுதி நிறுவனத்தின் முகாமையாளருடன் காதல் கொண்டிருந்தார். இம் முகாமையாளர் காரொன்றை கொள்வனவு செய்து கொள்வதற்கு, மேற்படி பணத்தொகையை குறிப்பிட்ட ஆசிரியையிடம் பெற்றுள்ளார்.

தனது காதலன் ஏற்கனவே திருமணமாகி, இரு பிள்ளைகளின் தந்தை என்பதை அறிந்த ஆசிரியை, தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து, தன்னிடம் பெற்ற பணத்தை மோசடி செய்த தனது காதலன் குறித்து, மொனராகலை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்துள்ளார். இப்புகாரையடுத்து, மொனராகலை பொலிஸார், தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். குறிப்பிட்ட ஆசிரியையிடம் பணம் மோசடி செய்த நபர், பிரதேசத்தை விட்டு, தலைமறைவாகி இருப்பதாக தெரியவந்துள்ளது.

# நுணாவிலில் மதகுருமார்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள்



(சாவகச்சேரி நிருபர்)

நுணாவில் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று (27) மதகுருமார்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவிவரும் வேளையில் எரிபொருளை நம்பி தமது வாழ்க்கையைக் கொண்டுநடத்தும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மதகுருமார்களின் நிலைமையைக் கருத்திற்கொண்டு நுணாவில் ஐ.ஓ.சி. உரிமையாளர் வை.சிவராசாவால் முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டது.

இது தொடர்பாக மதகுருமார்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

எரிபொருளை நம்பியே நாம் ஆலயங்களுக்கு சென்று நித்திய பணிகளில் ஈடுபட்டு வருகிறோம். இருப்பினும் எமது நிலைமையைக் கருத்திற்கொண்டு எவரும் எமக்கு முன்னுரிமை வழங்குவதில்லை. ஆனால் தற்போது நுணாவில் ஐ.ஓ.சி உரிமையாளர் எமக்கு முன்னுரிமை அடிப்படையில் பெற்றோல் வழங்க முன்வந்தமைக்கு நன்றிகள். தொடர்ச்சியாக இவ்வாறான செயற்பாடுகளை அவர் முன்னெடுக்க வேண்டுமெனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

யாழ். மாவட்டத்தின் பல பாகங்களில் இருந்தும் சர்வ மதகுருமார்கள் நுணாவில் ஐ.ஓ.சிக்கு வருகைதந்து எரிபொருள் நிரப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தினேஷ் பிரதமராகி முதன்முறையாக நாடாளுமன்றத்துக்கு வருகை







நாட்டின் 32ஆவது பிரதமராக நியமிக்கப்பட்டுள்ள தினேஷ் குணவர்தன அந்த பதவிக்கு நியமிக்கப்பட்டதையடுத்து, அவர் முதல் தடவையாக நேற்று (27) நாடாளுமன்றத்துக்கு விஜயம் செய்திருந்தார்.

புதிய சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆளுங்கட்சியின் முதற்கோலாசான் பிரசன்ன ரணதுங்க, யதாமினி குணவர்தன ஆகிய அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள் சிலர் மற்றும் பிரதமரின் செயலாளர் அநுர திசாநாயக்க, சபாநாயகரின் செயலாளர், பிரதமரின் மேலதிக செயலாளர் ஹர்ஷ விஜேவர்தன, ஆளுங்கட்சியின் பிரதான செயலாளர், ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன ஆகியோரும் பிரதமர் தினேஷ் குணவர்தனவை வரவேற்றனர்.

அதனை தொடர்ந்து பிரதமர் தினேஷ் குணவர்தன, ஜனாதிபதி மற்றும் பிரதமருக்காக ஒதுக்கப்பட்டுள்ள விசேட வாயிலில் நாடாளுமன்றத்திலுள்ள பிரதமர் அலுவலகத்துக்கு வருகைதந்ததுடன் அதன்போது வாசுதேவ நாணயக்கார, பந்துல குணவர்தன, நிமல் லான்ஷா, சிசிர ஜெயகொடி, வைத்தியர் கயசான் நவநந்த ஆகியோரும் அவரை வரவேற்க அங்கு வருகை தந்திருந்தனர்.

நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க, பிரதி செயலாளர் துஷானி ரோஹணவீர, உதவி செயலாளர் டிக்கிரி ஜயதிலக்க மற்றும் படைக்கலசேவிதர் நரேந்திர பெர்னாண்டோ ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# அத்தியாவசியப் பொருட்களை புகையிரதம் மூலம் யாழ்ப்பாணம் எடுத்துவர நடவடிக்கை

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு



(சாவகச்சேரி நிருபர்)

எரிபொருளை பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலைமை காணப்படுவதால் யாழ். மாவட்டத்திற்கு தேவையான மருந்து மற்றும் உணவுப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கொழும்பிலிருந்து புகையிரதம் மூலம் எடுத்து வருவதற்கான முன்னாயத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ். மாவட்ட வர்த்தகர்கள் கடந்த மாதம் என்னைச் சந்தித்து மாவட்டத்திற்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வரவும் அதேசமயம், யாழ். மாவட்ட உற்பத்திகளை கொழும்பிற்கு அனுப்பி வைக்கவும் 10தொடக்கம் 12புகையிரதங்களை சேவைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு என்னிடம் கோரியிருந்தனர்.

அதனைதொடர்ந்து, கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதியன்று இவ்விடயம் தொடர்பாக விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் எழுத்து மூலமாக தெரிவித்திருந்தேன்.

அதன் பயனாக குறித்த அத்தியாவசிய புகையிரத சேவைக்கான திட்ட முன்மொழிவினை சமர்ப்பிக்குமாறு இலங்கை புகையிரதத் திணைக்களத்திடம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கோரியுள்ளது. குறித்த புகையிரத சேவை துரிதமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில், அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் யாழ். மாவட்ட மக்கள் வெகுவாக சிரமப்படுவார்கள் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# திருமலை சாம்பல்தீவை உணர்திறன்மிக்க சுற்றுச்சூழல் நிறைந்த இயற்கை வனமாக அறிவிக்க அமைச்சு தீர்மானம்



திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவு களப்பை அண்மித்த பிரதேசத்தை உணர்திறன் மிக்க சுற்றுச்சூழல் நிறைந்த வலயமாகவும் இயற்கை வனமாகவும் பெயரிடுவதற்கு வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

வனஜீவராசிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வந்ரா ஹேரத் மற்றும் வனவளப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அதிகாரிகள் சிலருடன் அமைச்சர் இந்த கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார். சாம்பல் தீவு வலயத்தை அண்மித்த பிரதேசங்கள் பாரிய சதுப்பு நில மக்களை கொண்டதாகும். இருந்தபோதிலும், கடந்த சில வருடங்களாக 2 ஆயிரத்து 43 ஏக்கர் கொண்ட திருகோணமலை கடோலான சுற்றுச்சூழல் கட்டமைப்பில் ஆயிரத்து 491 ஏக்கர் நிரப்பரப்பு குறைவடைந்துள்ளதாக இதன்போது தெரியவந்துள்ளது.

அதற்கமைய, சாம்பல்தீவு களப்பை சூழவுள்ள இலுப்பைகுளம், வோரோதய நகரங்கள் மற்றும் உப்புவேலி ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக்கு சொந்தமான 238.58 ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட இந்தப் பிரதேசம், உணர்திறன்மிக்க சுற்றுச்சூழல் வலயம் என்பதுடன் இயற்கை வனப்பகுதியாக அறிவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அமைச்சரவை பத்திரத்தை தயார்படுத்துமாறு அமைச்சரினால் அமைச்சின் செயலாளர் சந்திரா ஹேரத்துக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

சாம்பல்தீவு களப்புப் பிரதேசத்தில் உயிர் பல்வகைமையை பாதுகாக்கும் வகையிலான திட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தினூடாக சுற்றுச்சூழலை அழகுபடுத்துதல், சுற்றுலா கைத்தொழிலை விஸ்தரிப்பதற்கு பெரும் ஒத்துழைப்பாக அமையும். அதனூடாக சுற்றுலா கைத்தொழில்துறையில் புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தி, பிரதேச மக்களின் வாழ்வாதார வழியை பாதுகாக்கக்கூடியதாக இருப்பதுடன், இலங்கைக்கு வெளிநாட்டு வருவாயை பெற்றுக்கொடுப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள கூடியதாக இருக்கும்.

சாம்பல்தீவு களப்புப் பகுதியை இலக்காக கொண்டு தேவையற்றவகையில் காணி ஆக்கிரமிப்பின் காரணமாக வெள்ளப்பெருக்கு அவதானம் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக அதனை சூழவுள்ள கிராமங்களில் மழைநீர் புகும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேபோன்று சாம்பல்தீவு களப்புப் பகுதியை ஆக்கிரமிப்பதால் அங்கு காணப்படும் உயிர் பல்வகைமை மற்றும் மிருகங்களின் வதிவிடம் என்பன அழிவடைந்துள்ளமையினால் சுற்றுலா செயற்பாடுகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அதன்காரணமாக, வசந்தகால பறவைகளின் இருப்பிடமான சாம்பல்தீவு களப்பில் உயிர் பல்வகைமையை பாதுகாத்து, நீண்டகால சுற்றுலா பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் அவசியமாகும். இதுவரையில் இடம்பெற்ற தேவையற்ற ஆக்கிரமிப்புகளை தடுத்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெடுத்தல், இந்த பிரதேசம் இயற்கையான வனமாக அறிவிக்க விரைவாக நடவடிக்கை எடுக்க வனஜீவிகள் மற்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

## அவசரகாலச் சட்டம்...

நேற்று (27) காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடி, இடம்பெற்ற விவாதங்களுக்கு பின்னரான வாக்கெடுப்பில் குறித்த யோசனை நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பதில் ஜனாதிபதியாக பதவி வகித்த நிலையில், கடந்த ஜூலை 17ஆம் திகதி பொதுமக்கள் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தி, அதற்கான வர்த்தமானி அறிவித்தலையும் வெளியிட்டார்.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்துக்கு அமைய இந்தப் பிரகடனத்துக்கு 14 நாட்களுக்குள் நாடாளுமன்றத்தில் அனுமதி கிடைக்கப்பெற்றால் ஒரு மாத காலத்துக்கு நடைமுறைப்படுத்தலாம். 14 நாட்களுக்குள் குறித்த சட்டத்துக்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைக்கப் பெறாவிட்டால் அது இரத்தாகும். அத்துடன், ஒவ்வொரு 30 நாட்களுக்கும் ஒரு முறை அவசரகால நிலைமை நாடாளுமன்றத்தின் அனுமதியுடன் நீடிக்கப்பட முடியும். இதனால், நாடாளுமன்ற அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக நேற்றுமுன்தினம் (26) ஒரு நாள் நாடாளுமன்ற சபை கூட்டப்பட்டது.

இதனையடுத்து, புதிய சபை முதல்வராக பொறுப்பேற்றுக்கொண்ட அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவால், பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் பதில் ஜனாதிபதியால் வெளியிடப்பட்ட அவசரகால நிலைமைப் பிரகடனம் தொடர்பான தீர்மானம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர், பி.ப 5.20 மணி வரை இதற்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துகள் முன்வைக்கப்பட்டதுடன், விவாதம் முடிவடைந்ததும் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான பிரேரணை மீது எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல வாக்கெடுப்பை கோரினார். அதற்கமைய, இலத்திரனியல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதன்போது, அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான யோசனைக்கு ஆதரவாக 120 வாக்குகளும் எதிராக 63 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இதனால், 57 மேலதிக வாக்குகளால் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும், அரச பங்காளிக்கட்சிகளும் ஆதரித்து வாக்களித்தன. விமல் வீரவங்ச, வாசுதேவ நாணயக்கார உள்ளடங்கலான சுயாதீன அணிகளும் ஆதரித்து வாக்களித்தன. இ.தொ.கா. எம்.பிக்கள் இருவரும் ஆதரித்து வாக்களித்தனர்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பன அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக வாக்களித்தன. டலஸ் அழகப்பெரும அணியும் எதிராகவே வாக்களித்தது.

## சர்வதேச தலையீட்டுக்கு...

இராணுவத்தினர் வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும் என முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச தெரிவித்தார்.

அத்தோடு, நாட்டை சீர்குலைக்கும் அராஜகக்காரர்களை தடுப்பதற்கு பயன்படுத்தும் அவசரகாலச் சட்டத்தை மக்களின் உரிமைகளை ஒடுக்குவதற்கு பயன்படுத்தினால், அடுத்த மாதம் இடம்பெறும் விவாதத்தில் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிப்போம் எனவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (27) ஆரம்பமான சபை அமர்வில் அவசரகாலச் சட்டம் தொடர்பாக இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

'கோட்டா கோ ஹோம்' என்றே போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மக்கள் முகம் கொடுத்திருந்த பாதிப்புகளுக்கு மத்தியில் கோட்டா கோ ஹோம் என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தனர். கோட்டா கோ ஹோம் என்ற நோக்கம் நிறைவேறினால் போராட்டங்கள் முடியும் என நினைத்தோம். ஆனால், தற்போது அவ்வாறில்லை. அடுத்த 9ஆம் திகதி மற்றொருவரையும் விரட்டுவதற்கு வருவதாகக் கூறினர். அவரை விரட்டியதும் தினேஷ் குணவர்தன, ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவாராம். இது ஒரு அலங்கோலம்.

'கோட்டா கோ ஹோம்', 'ரணில் கோ ஹோம்', 'தினேஸ் கோ ஹோம்' என்பதை விட யார் வேண்டும் எனக்கூறினால், அவரை ஜனாதிபதியாக்கலாம். இந்த நாடு சுவாசிக்க வேண்டுமல்லவா? ஒருத்தர் சென்றுவிட்டார். இனியாவது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இடமளிக்க வேண்டுமல்லவா? இந்த அரசாங்கத்துடன் எங்களுக்கும் இணங்க முடியாத விடயங்கள் உள்ளன. அவற்றை நாங்கள் வேறு வழியில் தீர்த்துக்கொள்கின்றோம்.

நாட்டு மக்கள் சர்வதேச ஊடகங்களுக்கு செய்திகள் வழங்குவதற்காக, லிபியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளை போன்ற சித்தரிப்பை உருவாக்குவதா போராட்டம்? மக்களின் சாதாரண ஆவேசத்தை நான் எப்போதும் பகைத்துக்கொள்ள மாட்டேன். அமைதியான போராட்டக்காரர்களை பகைத்துக்கொள்ளமாட்டேன். ஆனால், இங்கு நாட்டை சீர்குலைக்கும் நடவடிக்கையே இடம்பெறுகின்றது. அதற்கு இடமளிக்க முடியாது. எனக்கு ரணில் விக்ரமசிங்கவிடமிருந்து அமைச்சு பதவிகள் வேண்டாம். எனக்கு என்னுடைய நாடு வேண்டும்.

அரச சொத்துகளை கைப்பற்றிக்கொள்வது அமைதியான போராட்டமா? இராணுவ வீரர்களுக்கு தாக்குதல் நடத்தியபோது, அவர்கள் பொறுமையாக இருந்தனர். உலகத்திலேயே சிறந்த இராணுவமாகவுள்ளது. வீடுகளை எரித்து, உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல்விடுத்து மதகுருக்கள், பொலிஸாருக்கும் மனீதியில் தடைவிதித்தனர். இவ்வாறு செய்தால் நாடு சீர்குலையும்.

போராட்டத்திலுள்ளவர்கள் சிலர் மனித உரிமை ஆணைக்குழுவிற்குச் சென்று சர்வதேச தலையீட்டை கோரியுள்ளனர். அதேபோன்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஸ்ரீதரன், வெளிநாடொன்றுக்குச் சென்று வட, கிழக்கிற்கு சர்வதேச இராணுவத்தை கோரியுள்ளார். இதற்கு இடமளித்தால், போராட்டக்காரர்கள் வடக்கிலுள்ள இராணுவ முகாமிற்கு வந்து, அங்கிருந்து வெளியேறிச் சொல்வார்கள். வெளியேற வேண்டும். பின்னர், எங்களுடைய வழிபாட்டிடங்களுக்கு வந்து, அங்கிருந்தும் எங்களை வெளியேறச் சொல்வார்கள். வெளியேற வேண்டும். நாட்டை அராஜகத்திற்கு கொண்டுச் செல்ல இடமளிக்க முடியாது.

நீங்கள் போர் குற்றம் புரிந்தவர்கள். உங்களை விட பிரபாகரன் சிறந்தவர் என இராணுவத்தினரிடம் கூறுகின்றனர். எனவே, இவர்கள் போராட்டக்காரர்களல்ல. நாட்டை சீர்குலைக்கும் அராஜகக்காரர்கள். இதற்கு நாங்கள் முகம்கொடுக்க வேண்டும். இதற்காக பயன்படுத்தும் அவசரகாலச் சட்டத்தை மக்களின் உரிமைகளை ஒடுக்குவதற்கு பயன்படுத்தினால், அடுத்த மாதம் இடம்பெறும் விவாதத்தில் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிப்போம். நாட்டை சீர்குலைக்கும் அராஜகக்காரர்களை தடுக்க வேண்டும் - என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஜூலை 28ஆம் திகதி, வியாழக்கிழமை

# அடக்குமுறையில் ஈடுபடலாமா அரசு?

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து பணிகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் தனிஸ் அலி என்பவர் டுபாய் நோக்கிச் செல்லவிருந்த விமானத்தில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யபப்ட்டுள்ளார். கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை வெளியேறுமாறு கோரி கடந்த 09 ஆம் திகதி கொழும்பில் கூடிய பெருந்திரளான மக்கள் மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதன்போது ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் என்பன போராட்டக்காரர்களால் முற்றுகையிடப்பட்டன.

அதன் பின்னர் போராட்டக்காரர்கள் அங்கு தொடர்ச்சியாக தங்கியிருந்தனர். இந்நிலையில், ஜூலை 13 ஆம் திகதி இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் புகுந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர் நேரடி ஒளிபரப்புக்கு குந்தகம் விளைவிக்கும் விகையில் நடந்துகொண்டனர். ஒளிபரப்பை இடைநிறுத்துமாறு கோரிய போராட்டக்காரர்கள், தாங்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியை நேரலைப்படுத்துமாறு நிர்வாகத்தை கேட்டுக்கொண்டார்கள். அதன்பின்னர் அவர்கள் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டார்கள்.

அந்தப் போராட்டக்காரர்கள் ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்தமை, அங்கு நிர்வாகத்தினருடன் பலாத்காரமாக செயற்பட்டமை தொடர்பிலான காணொளிகள் வெளியாகியிருந்ததுடன், சமூகத்தின் மத்தியில் எதிர்மறை கருத்தாடல்களையும் உண்டுபண்ணியிருந்தன.

இவ்வாறானதொரு சூழ்நிலையில், ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட ரணில் விக்கிரமசிங்க அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தி பொலிஸாருக்கும், முப்படையினருக்கும் அதிகாரத்தை பலப்படுத்தியதுடன், போராட்டம் என்ற பெயரில் வன்முறைகளிலும், குற்றங்களிலும் ஈடுபட்டோரை கைதுசெய்யுமாறும் பணிப்புரை வழங்கியிருந்தார்.

இந்நிலையிலேயே, ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்தவர்களில் ஒருவரான தனிஸ் அலி என்பவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் மாலை 06.35 மணிக்கு டுபாய் நோக்கிப் பயணமாகவிருந்த யூ.எல். 225 என்ற ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான விமானத்துக்குள் சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரைக் கைதுசெய்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் அவரைக் கைதுசெய்யும்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நடந்துகொண்ட விதம் பல்வேறு விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, எந்தவித ஆவணங்களும் இல்லாமல் அவரை வலுக்கட்டாயமாக இழுத்து அழைத்துச் செல்ல முற்பட்டமை தொடர்பில் விமானத்துக்குள்ளேயே எதிர்ப்புகள் வலுத்தன.

தனிஸ் அலியின் சட்டையை பிடித்து, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பலாத்காரமாக வெளியேற்ற முயற்சித்தனர். தனது சுயநலத்துக்காகவன்றி நாட்டு மக்களின் நன்மை கருதியே போராட்டத்தில் ஈடுபட்டதாக சந்தேக நபர் அதன்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் தெரிவித்தார். போராட்டத்தில் ஈடுபட்ட நபரிடம் இவ்வாறு நடந்துகொள்வது எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும் என விமானத்தில் இருந்தவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். எனினும், சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டு விமானத்திலிருந்து அழைத்துவரப்பட்டார்.

அவர் விமான நிலையத்துக்கு வரும்வரை வெளிநாட்டுப் பயணத்துக்கான நீதிமன்றத்தடை உத்தரவு குடிவரவு-குடியகல்வு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னரே நீதிமன்ற உத்தரவுப் பத்திரத்தை எடுத்துக்கொண்டு அதிகாரிகள் விமான நிலையத்துக்கு வருகைதந்து சந்தேக நபரை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அரச தொலைக்காட்சி ஸ்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து அதன் சேவைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தியமை சட்ட ரீதியாக தவறானதாகும். அவ்வாறு உள்நுழைந்ததன் காரணமாக ரூபவாஹினி, சுயாதீன தொலைக்காட்சி, வசந்தம் தொலைக்காட்சி ஆகியவற்றின் ஒளிபரப்பு சில மணிநேரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

ஜனநாயகப் போராளிகள் என்று சொல்லிக்கொண்டவர்களின் சட்டத்துக்குப் புறம்பான செயற்பாட்டுக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

ஆனபோதிலும், சந்தேக நபர் ஒருவருடன் பாதுகாப்புப் பிரிவினர் நடந்துகொள்ள வேண்டிய முறையொன்று உண்டல்லவா? நீதி அனைவருக்கும் பொதுவானதென்றால், ஒருவருக்குரிய தனிமனித அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும் என்பதும் சட்டம்தானே?

ஏதோ தங்களை மீறி விமானம் புறப்பட்டுவிடுவதுபோன்ற எண்ணத்தில் பலவந்தமாக அழைத்துச் செல்ல முற்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சியில் இருந்தபோது போராட்டக்காரர்களுக்கு ஆதரவாகப் பேசியிருந்தார். அதன் பின்னர் பிரதமராக நியமனமானபோது போராட்டக்காரர்களுக்குரிய வசதிகளை செய்துகொடுக்கும் பணிகளை முன்னெடுக்குமாறு மாநகரசபையை அறிவுறுத்தியிருந்தார். ஆனால், ஜனாதிபதியாக பதவியேற்றதும் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி போராட்டத்தையும், போராட்டக்காரர்களையும் முடக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை அண்மைய செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன. அதில் ஓர் அங்கமாகவே விமானத்துக்குள் நுழைந்து பலாத்காரமாக சந்தேக நபரை கைதுசெய்த விவகாரத்தையும் எடுத்துக்கொள்ள முடியும்.

இதன்மூலம், போராட்டக்காரர்களுக்கு எச்சரிக்கை செய்தியை ஜனாதிபதி ரணில் சொல்கிறாரோ என்ற சந்தேகமும் இங்கே எழுகிறது. ஜனநாயகப் போராட்டம் இடம்பெறும்போது சட்டத்துக்கு முரணான செயற்பாடுகள் இடம்பெற்றிருக்குமாயின் அதனை சட்டத்தின் வாயிலாக எதிர்கொள்ள வேண்டுமே தவிர அடக்குமுறையால் அல்ல என்பதை ரணில் விக்கிரமசிங்க புரிந்துகொள்ள வேண்டும்.



# நியாயப்பாடுடைய அரசாங்கத்தை நிறுவ ஜனாதிபதி கடும் பாடுபடவேண்டியிருக்கும்!



கலாநிதி
ஜெகான் பெரேரா

நாடாளுமன்றத்தில் பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவுசெய்யப்பட்டதை அடுத்து கடந்த நான்கு மாதங்களாக நீடித்த அரசியல் மற்றும் பொருளாதார குழப்பநிலை முடிவுக்கு வரும் என்று பொதுமக்கள் மத்தியில் தற்போதைக்கு ஒரு நம்பிக்கையுணர்வு ஏற்பட்டிருக்கிறது. வெற்றிபெற்ற பிறகு சபையில் உரையாற்றிய அவர், தன்னுடன் கைகோர்க்குமாறு எதிரணி தலைவர்களுக்கு – சிலரின் பெயர்களையும் குறிப்பிட்டு – அழைப்பு விடுத்தார். தற்போதைய சூறாவளிக்கு மத்தியில் அரசுக் கப்பலை நிலையுறுதிப்படுத்துவதற்கு தேவையான அறிவு வளமும், பல வருடகால ஆட்சிமுறை அனுபவமும் விக்கிரமசிங்கவுக்கு இருக்கிறது என்பது பொதுவில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

அரசியல் செயற்பாட்டாளர்களைத் தவிர பொதுவில் மக்கள் முடிவற்ற வீதிப்போராட்டங்களினாலும், அத்தியாவசியப் பொருட்களை பெறுவதற்காக நீண்ட வரிசைகளில் தினமும் காத்திருப்பதனாலும் களைத்துப்போய்விட்டார்கள். அவர்களுக்கு ஓய்வு தேவைப்படுகிறது. இது போராட்ட இயக்கத் தலைவர்களினாலும் குறைந்த பட்சம் மறைமுகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொலிஸாரினால் பெறப்பட்ட நீதிமன்ற உத்தரவை மதித்து 104 நாட்களாக தாங்கள் முற்றுகையிட்டிருந்த போராட்டக்களத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் இருந்து வாபஸ் பெறுவதாக அவர்கள் அறிவித்தார்கள்.

இந்த நேர்மறையான நிகழ்வுப்போக்குகளுக்கு மத்தியில், அதுவும் போராட்டக்காரர்கள் தாங்களாகவே வாபஸ் பெறுவதாக அறிவித்த நேரத்துக்கு 12 மணித்தியாலங்கள் முன்னதாக அதிகாலை வேளையில் இராணுவமும், பொலிஸும் கூட்டாக போராட்டக்களத்தில் தாக்குதல் நடத்தியதை விளங்கிக்கொள்வது கஷ்டமாக இருக்கிறது. அவர்கள் பட்டுக்கையுறையுடன் இரும்புக்கரங்களை காட்டியிருக்கிறார்கள். போராட்டக்களத்தில் இருந்தவர்கள் மீது படையினரும், பொலிஸாரும் தாக்குதல் நடத்தியதிலும், அவர்களை சித்திரவதை செய்ததிலும் காட்டிய முரட்டுத்தனம் பெரும் அதிர்ச்சியைத் தந்தது.

மூன்றாவது சக்தியொன்றும் அங்கு பிரசன்னமாக இருந்தது என்ற சந்தேகமும் உண்டு. சீருடையில் இருந்த ஆயுதப்படைகளுடன் சேர்ந்து நின்ற சிலர் மதுபோதையில் இருந்ததாக முறைப்பாடுகள் வந்திருக்கின்றன. சிவிலியன் குழுக்களை பாதுகாப்பு படைகள் எதிர்கொள்ளும்போது அத்துமீறல்கள் அல்லது பிழைபாடுகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் பெரும்பாலும் இந்த மூன்றாவது சக்தி என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. மூன்றாவது சக்தியொன்று இருக்குமானால் அது அடையாளம் காணப்பட்டு வலுவழக்கச் செய்யப்படவேண்டும்.

படையினரும், பொலிஸாரும் மேற்கொண்ட தாக்குதல் உடனடியாகவே கடுமையான கண்டனங்களுக்கு இலக்கானது. "அதிகாலை வேளையில் கொழும்பு காலிமுகத்திடலில் அமைதிவழி போராட்டக்காரர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் கொடூரமானதாகும்" என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கூறியது. மேலும், ஓர் அரச அமைப்பான அந்த ஆணைக்குழு தாக்குதல்களை நடத்தியவர்கள் அடையாளம் காணப்பட்டு உகந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கக்கூடிய இராணுவத்தின் நடவடிக்கைகளோ அல்லது வேறு நடவடிக்கைகளோ மக்களின் அடிப்படை உரிமைகளை எதிர்காலத்தில் மீறாதிருப்பது உறுதிசெய்யப்படவேண்டும் என்றும் அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கு தனது சொந்த விசாரணைகளும் நடத்தப்படும் என்றும் ஆணைக்குழு கூறியது. மக்கள் முன்னெடுக்கக்கூடிய எதிர்ப்பியக்கங்களை தடுக்க எதிர்காலத்தில் படைபலப் பிரயோகத்துடனான தலையீட்டை செய்வதற்கான ஒரு பரீட்சார்த்தமாக இந்த தாக்குதல் அமையக்கூடிய சாத்தியம் தடுக்கப்படவேண்டும்.

## பதற்றத் தணிவு

போராட்டக்காரர்கள் வெளியேறுவதற்கு சில மணிநேர அவகாசத்தை கொடுப்பதற்கு அரசாங்கம் தவறியமை, கடுமையான விமர்சனங்களுக்கு வழி திறந்துவிட்டதுடன், அரசாங்கத்தை ஒரு தற்காப்பு நிலைக்கும் தள்ளிவிட்டது. அமைதிவழி போராட்டக்காரர்கள் மீது இராணுவத்தினரும், பொலிஸாரும் மேற்கொண்ட ஒருங்கிணைந்த தாக்குதலும், போராட்டக்களத்துக்கு அம்பியூலன்ஸ் வண்டிகளும், மருத்துவப்பணியாளர்களும் உடனடியாக வந்து சேர்வதை தடுத்தது போன்ற செயல்களும் சர்வதேச நிதியுதவியை நாடு வேண்டி நிற்கின்ற ஒரு நேரத்தில் சர்வதேசத்தின் கண்டனத்துக்கு இலக்காகியிருக்கின்றன.

மனித உரிமைகள் நியமங்களும், பொறுப்புக்கூறும் கடப்பாட்டு கோட்பாடுகளும் பின்பற்றப்படவேண்டிய கட்டாயத்தை தங்களது உதவிகளுக்கான நிபந்தனையாக சர்வதேச நாணய நிதியமும், ஐரோப்பிய ஒன்றியமும் அறிவித்திருக்கின்றன. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கை தொடர்ந்தும் பெறவேண்டுமானால் மனித உரிமைகள் கடப்பாடுகளை நிறைவேற்றவேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் அதன் அறிக்கையில் அரசாங்கத்துக்கு நினைவுபடுத்தியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

உணர்ச்சிகள் தீவிரமடைந்து சமுதாயம் துருவமயப்படக்கூடிய ஆபத்து இருக்கின்ற ஒரு நேரத்தில், அரசாங்கம் பதற்றநிலையை தணிப்பது அவசியமானதாகும். கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர சமூகத்துடனான சந்திப்பொன்றில் ஜனாதிபதி மக்கள் அமைதிவழியில் ஒன்று கூடுவதற்கு இருக்கும் உரிமையை இலங்கை போற்றிப்பேணும் என்று உறுதியளித்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்ட அறிக்கையொன்றில் கூறப்பட்டிருந்தது.

போராட்டங்களை நடத்துவதற்கு கொழும்பிற்குள் பல இடங்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. காலிமுகத்திடல் பரந்தவெளி "அரகலய" போராட்ட இயக்கத்துக்கு கிடைக்கச் செய்த அளவு பிரகாசத்தை மற்றைய அரங்குகள் எந்தவொரு போராட்டத்துக்கும் கிடைக்கச் செய்வதற்கில்லை.

சர்வதேச நடைமுறைகள் பற்றி நிறையவே அறிந்திருப்பவர் என்று பெயரெடுத்த ஜனாதிபதி விக்கிரமசிங்க போராட்டக்காரர்கள் அரசாங்கக் கட்டடங்களை முற்றுகையிட்டு ஆக்கிரமிப்பது பற்றிய அமெரிக்க சிவில் உரிமைகள் ஒன்றியத்தின் நிலைப்பாட்டையும் இராஜதந்திரிகளிடம் சுட்டிக்காட்டினார். அவ்வாறான முற்றுகைகளோ, ஆக்கிரமிப்புகளோ அனுமதிக்கக் கூடியவையல்ல என்று அவர் எடுத்துக்கூறினார்.

இராணுவ பலப்பிரயோகம் ஒரு கட்டத்தில் பயனுடையதாகத் தோன்றலாம். ஆனால், மக்கள் இயக்கங்களைப் பொறுத்தவரை அது விளைவுகளை தாமதிக்கவே செய்யும். அது துரதிர்ஷ்டவசமானது. போராட்ட இயக்கத்தையும், தொடர்கின்ற ஆர்ப்பாட்டங்களையும் கையாளுவதற்கு சிறந்த வழி அவர்களின் அக்கறைக்குரிய விடயங்களை கவனிப்பதேயாகும். பரந்தளவில் பொதுமக்களின் அக்கறைகளையே போராட்ட இயக்கமும் பிரதிபலிக்கிறது. மக்களின் ஆதரவு போராட்ட இயக்கத்துக்கு உண்டு. அந்த அக்கறைகளை கவனத்தில் எடுத்துச் செயற்பட்டால் அரசாங்கத்துக்கு நியாயப்பாடு கிடைக்க வழி ஏற்படும்.

போராட்ட இயக்கத்தில் சனத்தொகையின் சகல பிரிவினரும் தலைமுறைகள் மற்றும் இனப்பிளவுகள் கடந்து பங்கேற்றார்கள் என்பதை மனதிற்கொள்ளவேண்டியது அவசியமாகும். மீண்டும் தேவை ஏற்பட்டால், திகதி குறிப்பிடப்பட்டால் வீதிகளில் இறங்கி மாபெரும் போராட்டங்களை மக்கள் நடத்தக்கூடிய ஓர் ஆற்றலை போராட்ட இயக்கம் உருவாக்கியிருக்கிறது.

## நியாயப்பாட்டை மீள் நிலைநிறுத்தல்

போராட்ட இயக்கத்தின் வெற்றியே விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி பதவியைக் கிடைக்கச்செய்தது என்பது ஒரு முரண்நகையாகும். அந்த போராட்ட சக்தியே அவரை அதிகாரத்துக்கு கொண்டுவந்தது என்பதால் போராட்டக்காரர்களை தனது எதிரியாக அல்லாமல் நேர்மறையான வெளிச்சத்தில் நோக்கமுடியுமாக இருந்தால் மாற்றத்துக்கான ஒரு சக்தியாக அது மிளிரும்.

போராட்ட சக்தியை முன்னரங்கத்துக்கு கொண்டுவந்தவை பொருளாதாரக் காரணிகளே. அந்தக் காரணிகள் இன்னமும் தொடர்ந்து இருக்கின்றன. அதனால் அவை தொடர்ந்தும் வலுவான சக்தியாகவே விளங்குகின்றன. ஜனாதிபதி தெரிவு முடிவு அறிவிக்கப்பட்ட உடனடியாகவே விக்கிரமசிங்க பதவி விலகவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். ஆனால், சீர்திருத்தத்துக்கான அவர்களின் பிரதான கோரிக்கைகள் முற்றிலும் நியாயமானவை. பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தக்கூடியதும், அரசாங்கத்தில் ஊழலுக்கு முடிவு கட்டக்கூடியதுமான முறைமை மாற்றமும் அந்த கோரிக்கைகளில் அடங்கும். உதவிவழங்கும் சர்வதேச சமூகமும், குறிப்பாக சர்வதேச நாணய நிதியமும் அதையே இலங்கையிடம் கோருகின்றன.

மேலும், ஜனாதிபதியை தெரிவுசெய்த நாடாளுமன்றப் பெரும்பான்மை மூன்று வருடங்களுக்கு முன்னர் தேர்தலில் மக்களால் வழங்கப்பட்ட ஆணையை அடிப்படையாகக் கொண்டது. புதிதாக தெரிவான ஜனாதிபதியினதும், முன்னைய அரசாங்கத்தின் அமைச்சர்களையே கொண்டதாக அவரால் நியமிக்கப்பட்ட அரசாங்கத்தினதும் நியாயப்பாடு பற்றிய பிரச்சினை ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கூறப்படுகின்ற முறைப்பாடுகளினால் மேலும் சிக்கலாக்கப்பட்டிருக்கிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகள் தேக்கு மரங்களைப் போன்று விலைக்கு வாங்கப்பட்டதாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களில் ஒருவர் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டினார். தோற்கடிக்கப்பட்ட எதிரணி வேட்பாளர்களுக்கும், வெற்றிபெற்றவருக்கும் இடையிலான வாக்கு வித்தியாசம் எதிர்பார்த்திராத அளவுக்கு பெரிதாக இருந்தது. கட்சிகள் எடுத்த தீர்மானங்களுக்கு முரணாக அவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களை வாக்களிக்கச் செய்வதற்கு பெருமளவு பணம் கைமாறியதாக சமூக ஊடகங்களில் பெருவாரியான பதிவுகளைக் காணக்கூடியதாக இருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவரின் கீழ் பிரதமராக இருந்தபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பதாக உறுதியளித்திருந்தார்கள். அதன் காரணத்தினால்தான் அரசாங்கத்தின் இன்றைய ஆணை கேள்விக்கிடமான தன்மையுடையதாக இருக்கிறது. அரசாங்கத்தின் தற்போதைய நியாயப்பாட்டு நெருக்கடிக்கு (Crisis of legitimacy) ஒரே மாற்றுமருந்தாக சர்வகட்சி அரசாங்கமே பரவலாக நோக்கப்படுகிறது. ஆனால், புதிய அரசாங்கத்தின் அமங்கலமான தொடக்கம் அத்தகைய சர்வகட்சி அரசாங்கத்தை ஜனாதிபதி அமைப்பதை மேலும் சிக்கலாக்கும் என்றே தெரிகிறது.

போராட்ட இயக்கம், எதிரணிக் கட்சிகள் மற்றும் சர்வதேச உதவிவழங்கும் சமூகம் ஆகியவற்றுடன் ஊடாட்டங்களைச் செய்யக்கூடிய நியாயப்பாடுடைய அரசாங்கம் ஒன்றை நிறுவுவதற்கு ஜனாதிபதி மிகவும் கடுமையாக பாடுபடவேண்டியிருக்கிறது.

தன்னை அதிகாரத்துக்கு கொண்டுவருவதற்கு வாக்களித்த கட்சி உட்பட கட்சிப்பிளவுகளுக்கு அப்பால் வெளிக்கிளம்புவதற்கான வாய்ப்பை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டிருக்கிறார். அதற்கு மாற்று, போராட்ட இயக்கத்துடனான மோதலாகவே இருக்கமுடியும். அதற்கான அறிகுறிகளை அண்மையில் காணக்கூடியதாக இருந்தது. மீண்டும் அவ்வாறு நிகழாதிருக்கவேண்டும் என்று நம்புவோமாக!

## இன்றைய நாளில்...

1868 – ஆபிரிக்க அமெரிக்கர்களுக்குக் குடியுரிமை வழங்கும் சட்டமூலம் ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

1917 – ஆபிரிக்க அமெரிக்கர்கள் மீது நடத்தப்படும் படுகொலைகள் மற்றும் வன்முறைகளை எதிர்த்து நியூயோர்க்கில் அமைதியான போராட்டங்கள் இடம்பெற்றன.

1943 – இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் ஹெம்பர்க் நகர் மீது பிரித்தானியா நடத்திய குண்டுத் தாக்குதலை அடுத்து அங்கு நெருப்புப்புயல் உண்டாகியதில் 42,000 பேர் உயிரிழந்தனர்.

1948 – இலங்கை நாடாளுமன்றத்தில் முதல் தடவையாக உறுப்பினர்கள் சிங்கள மொழியில் உரையாற்றினர்.

1957 – ஜப்பானின் மேற்கு கியூசூ, இசகாயா ஆகிய இடங்களில் மழை, மற்றும் மண்சரிவு காரணமாக 992 பேர் உயிரிழந்தனர்.

1972 – இந்தியா-பாகிஸ்தான் அரசுகளுக்கிடையே பண்ணுறவாண்மையை மேம்படுத்துவதற்காக சிம்லா ஒப்பந்தம் இரு நாடுகளுக்குமிடையே கையெழுத்திடப்பட்டது.

1976 – சீனாவில் டங்சான் நகரில் இடம்பெற்ற 8.2 அளவு நிலநடுக்கத்தில் 242,769 பேர் உயிரிழந்தனர். 164,851 பேர் காயமடைந்தனர்.

1996 – தொல்பழங்கால மனிதனின் எச்சங்கள் வொஷிங்டன் கெனெவிக் நகரில் கண்டுபிடிக்கப்பட்டன.

2001 – உலக நீச்சல் வாகையாளர் போட்டிகளில் அவுஸ்திரேலியாவின் இயன் தோப் ஆறு தங்கப் பதக்கங்களைப் பெற்ற முதலாவது நீச்சல் வீரர் என்ற சாதனையை ஏற்படுத்தினார்.

2005 – ஐரியக் குடியரசுப் படை வட அயர்லாந்தில் தனது 30 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாக அறிவித்தது.

2006 – ஈழப்போர்: வாகரையில் இலங்கைப் போர் விமானங்கள் தாக்கியதில் பலர் கொல்லப்பட்டனர்.

2017 – ஊழல் குற்றச்சாட்டில் பாகிஸ்தான் முன்னாள் பிரதமர், நவாஸ் ஷெரீப்புக்கு உயர்நீதிமன்றத்தினால் வாழ்நாள் தடைவிதிக்கப்பட்டது.

## நக்கல் நமசிவாயம்

குரங்கம்மை வந்தபடியாலதான் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாமல் போனதென்று ரணில் அடுத்த வருடம் சொன்னாலும் சொல்லுவார்..!



# பொதுஜன பெரமுனவை திருப்திப்படுத்தவே போராட்டக்காரர்கள் மீது அடக்குமுறை!

## காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டக்காரர்களை ஒடுக்குவதை நிறுத்துமாறு ஜே.வி.பி. வலியுறுத்து

காலிமுகத்திடல் போராட்டக்காரர்களை கைது செய்வதையும் ஒடுக்குவதையும் நிறுத்துமாறு மக்கள் விடுதலை முன்னணி (ஜேவிபி) அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

காலிமுகத்திடலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரதிநிதிகளுடன் பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

மறுநாள் பிற்பகல் 2.00 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தை கையளிப்பதாக உறுதியளித்த போதிலும், போராட்டக்காரர்கள் மீது கடுமையான தாக்குதலை கட்டவிழ்த்து விடுவதற்கு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயுதப்படைகளை பயன்படுத்தினார்.

ரணிலை ஜனாதிபதியாக்குவதற்கு வாக்களித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எம்.பிக்களை திருப்திப்படுத்தவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்குப் பிறகும், பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் போராட்டக்காரர்களை கைதுசெய்யும் நடவடிக்கை உள்ளது. பல்வேறு இன்னல்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மற்றும் சேவைகளில் தட்டுப்பாடு காரணமாக எழுந்த பொது மக்கள் போராட்டத்தின் காரணத்தை அரசாங்கம் உணரவில்லை. அடக்குமுறை மூலம் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் தடுக்க முயற்சிக்கிறது - என்றார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்க, அடக்குமுறை சட்டங்கள் மற்றும் அவசரகாலச் சட்டம் போன்ற ஒழுங்குமுறைகளைப் பயன்படுத்தி பொதுமக்களின் எதிர்ப்பை அடக்குவதற்கு முயற்சிப்பதாகத் தெரிவித்த திஸாநாயக்க, அத்தகைய நடவடிக்கைகளை நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

## 27.07.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 134 6561 | 145 8858 |
| கனேடியன் டொலர் | 165 047 | 177 2106 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 8418 | 44 84 |
| யூரோ | 25 7487 | 264 107 |
| ஜப்பான் யென் | 1 4860 | 1 6 05 |
| சிங்கப்பூர் டொலர் | 144 68 8 | 155 2777 |
| ஸ்ரேலிங் பவுன் | 317 3740 | 334 3772 |
| சுவிஸ் பிராங்க் | 258 3517 | 274 6 8 |
| ஐ.அ.டொலர் | 246 33 5 | 257 3811 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 846 4105 |
| குவைட் | குவைட் தினார் | 0,064 0765 |
| ஓமான் | ஓமான் றியால் | 826 54 1 |
| கட்டார் | கட்டார் றியால் | 87 0307 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 634 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 1710 |

# துருக்கியின் அன்டலியாவில் இலங்கை பட்டிக் ஆடைகளுக்கு ஊக்குவிப்பு

அன்டலியாவிற்கான இலங்கையின் துதுவர் அலி கம்புரோக்லுவின் உதவியுடன் இலங்கை பட்டிக் ஊக்குவிப்பு நிகழ்வின் இரண்டாம் கட்டத்தை துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம்








அண்மையில் ஏற்பாடு செய்தது.

துருக்கியின் சுற்றுலா மையமான அன்டலியா நகரிலுள்ள கொன்யால்டி கடற்கரையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. பார்வையாளர்கள் இலங்கையின் பட்டிக் மற்றும் கைத்தறிப் புடவைகள், போர்வைகள், சால்வைகள் மற்றும் ஏனைய ஆடைகளின் கவர்ச்சியை பாராட்டியதுடன், இலங்கை விநியோகஸ்தர்களுடன் இணைந்து கொள்வதற்காக வர்த்தகத் தளங்களினூடாக தொடர்புகொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினர்.

நிகழ்வின்போது, இலங்கையின் பெஷன் துறை மற்றும் பட்டிக் மற்றும் கைத்தறியின் தனித்துவம் குறித்து தூதுவர் ரிஸ்வி ஹசன் அதிதிகளுக்கு விளக்கினார்.

இலங்கையின் பட்டிக் மற்றும் கைத்தறித் தொழில்துறையை மட்டுமல்லாது, குறும்படத் துறையையும் ஆராயுமாறு தூதுவர் கம்புரோக்லு விருந்தினர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்த நிகழ்வில் இலங்கையின் ஐந்து குறும்படங்கள் திரையிடப்பட்டதுடன், விருந்தினர்களுக்கு இலங்கையின் உணவு வகைகளும் வழங்கப்பட்டன.

# கண்ணீர்ப்புகைக் குண்டுகளை திருடியவர் கைது!

பொல்துவ சந்தியில் கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது பொது ஒழுங்கு முகாமைத்துவப் பிரிவின் அதிகாரிகளினால் முச்சக்கரவண்டியில் எடுத்துச் எடுத்தச்செல்லப்பட்ட கண்ணீர்ப்புகைக்



குண்டுகளை திருடியதாக குறிப்பிடப்படும் நபரொருவர், எத்துல் கோட்டே, அலகேஸ்வர மாவத்தையிலுள்ள வீடொன்றில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டதரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து ஐந்து கண்ணீர்ப் புகைக் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

மேல் மாகாண தென் குற்றப்பிரிவு அதிகாரிகளினால் கைதுசெய்யப்பட்ட குறித்த சந்தேகநபர் 26 வயதுடையவர் என்பதுடன், அவர் மேலதிக விசாரணைகளுக்காக கண்ணீர்ப்புகைக் குண்டுகளுடன் வெலிக்கடை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேல் மாகாண தெற்கு துணைத் தடுப்புப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திகதி, நேரத்தை ஒதுக்கியோருக்கு மாத்திரமே கடவுச்சீட்டு விநியோகம்

## குடிவரவு - குடியகல்வுத் திணைக்களம் அறிவிப்பு

திகதி மற்றும் நேரத்தை ஒதுக்கியோருக்கு மாத்திரமே கடவுச்சீட்டு விநியோகிக்கப்படும் என குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த நடைமுறை நேற்று (27) முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் மீளவும் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலை கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அவசரமாக வெளிநாடு செல்லவுள்ளோருக்கான விசேட ஒருநாள் சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அவசர தேவையின் நிமித்தம் கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதாயின் தமது தகவல்களை 070 63 11 711 என்ற WhatsApp இலக்கத்திற்கு அனுப்பும் பட்சத்தில், கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கான திகதியை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கூறியுள்ளது.

# பொலிஸாரை அச்சுறுத்திய தந்தையும் மகனும் கைது

பொல்கஹவெல நகரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகளை அச்சுறுத்தல் விடுத்தமை தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தந்தை மற்றும் மகன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர். குறித்த சந்தர்ப்பத்தில் சந்தேகநபர்கள் இருவரும் மதுபோதையில் இருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களின் தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் அதிகாரியொருவர் பொல்கஹவெல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொல்கஹவெல பகுதியைச் சேர்ந்த 23 மற்றும் 50 வயதான சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# இலங்கைக்கு வரவுள்ள சீனாவின் விஞ்ஞான ஆய்வுக் கப்பல்!

சீனாவின் விஞ்ஞான ஆய்வுக் கப்பல் ஒன்று இலங்கையின் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வரவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் 11ஆம் திகதி ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வரும் சைனாஸ் யுவான்வாங்-5 என்ற இந்தக் கப்பல் ஓகஸ்ட் 17ஆம் திகதிவரை துறைமுகத்தில் தரித்து நிற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலின் வருகை இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என்று இந்திய ஊடகங்கள் எதிர்வுகூறியுள்ளன. இந்நிலையில், குறித்த கப்பல் இந்தியப் பெருங்கடல் மண்டலத்தின் வடமேற்குப் பகுதியில் செயற்கைக்கோள் ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து சுமார் 250 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகம் அதிக வட்டியுடனான சீன கடனுதவியில் நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் சீனாவிற்கான கடனை திருப்பிச் செலுத்த முடியாமையால், 99 வருட குத்தகைக்கு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது. சைனாஸ் யுவான்வாங்-5 விண்வெளி கண்காணிப்புக் கப்பல் விண்வெளி - தரை தகவல் பரிமாற்றத்தை செயல்படுத்தி வருகிறது.

அத்துடன், செயற்கைக்கோள்களின் சுற்றுப்பாதை நிர்ணயம் மற்றும் அணுகலுக்கு முக்கியமான தகவல் வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



***இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே மற்றும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது. இச்சந்திப்பில் இலங்கையின் பொருளாதார நிலைமையும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.***

***இந்நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் கலந்துகொண்டதுடன், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மைச் செயலாளர் எல்டோஸ் மெத்யூவும் கலந்துகொண்டார்.***

# 2022 –பெட்ஃபோர்ட் நதித் திருவிழாவில் இலங்கைக்கு முக்கியத்துவம்

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம், இலங்கை தேயிலை சபை, தேசிய கைவினை சபை, இங்கிலாந்திலுள்ள தொழில்முறை இலங்கையர்களின் சங்கம் (ஏ.பி.எஸ்.எல்), பசிலூர் தேயிலை யு.கே, சர்வதேச சுகாதார விஞ்ஞான நிறுவனம் மற்றும் பெட்ஃபோர்ட்ஷையரில் உள்ள இலங்கை சமூகத்தினருடன் இணைந்து லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் 2022 ஜூலை 23 மற்றும் 24ஆம் திகதிகளில் விருது பெற்ற பெட்ஃபோர்ட் நதித் திருவிழாவில் வர்த்தகம் மற்றும் சுற்றுலா ஊக்குவிப்பு நிகழ்வை ஏற்பாடு செய்தது.









இலங்கையின் கைவினைப்பொருட்கள், சுற்றுலா, கலாசாரம், பாரம்பரியம் மற்றும் சிலோன் டீ ஆகியவற்றைக்கொண்டதன் மூலம் பெட்ஃபோர்ட் சமூகத்தினரிடையே இலங்கையை அவர்களின் அடுத்த விடுமுறை இடமாக மேம்படுத்துவதற்கான வாய்ப்பை இந்நிகழ்வு வழங்கியது.

சோ ஸ்ரீலங்கா என்ற பதாகைகளை காட்சிப்பட்டதன் மூலமும், சிற்றேடுகள், நினைவுப் பொருட்கள் மற்றும் வரைபடங்களை விநியோகிப்பதன் மூலமும் இலங்கை சுற்றுலாவுக்கான பரந்த விளம்பரம் ஏற்பாடு செய்யப்பட்டது. ஓய்வு, உணவு, கலாசாரம், வனவிலங்கு, விளையாட்டு மற்றும் வணிகம் ஆகியவற்றில் ஆர்வமுள்ள இங்கிலாந்து சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை வழங்கும் வாய்ப்புகளை உயர்ஸ்தானிகராலய ஊழியர்கள் ஊக்குவித்தனர்.

இலங்கையின் கைவினைப் பொருட்களை சர்வதேச ரீதியில் ஊக்குவிக்கும் மற்றும் ஆதரிக்கும் முயற்சியாக தேசிய கைவினைப் பேரவையின் லக் ஷில்பா வர்த்தக நாமத்தின் பல கைவினைப்பொருட்கள் இந்தக் கூடத்தில் விற்பனைசெய்யப்பட்டன. சிலோன் டீ சுவைத்தல் மற்றும் வினாடி வினா நிகழ்ச்சி ஆகியன நதித் திருவிழாவில் ஒரு சிறப்பம்சமாக இருந்தன.

இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில், 2022 ஜூலை 24ஆம் திகதி கூடம் மற்றும் விளையாட்டு அரங்கில் விளையாட்டு மற்றும் வேடிக்கையான நடவடிக்கைகள் இடம்பெறும் சமூக அரங்கில் நடன நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது. தெல்மே, நாக ரக்ஷா மற்றும் குருலு ரக்ஷா உள்ளிட்ட கண்டிய மற்றும் கீழ்நாட்டு நடனங்களின் கண்கவர் நிகழ்ச்சி பார்வையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

நடவடிக்கைகள், வர்த்தகக் கூடங்கள் மற்றும் பெட்ஃபோர்ட்ஷையர் சமூகத்தின் நிகழ்ச்சிகளைக் காண்பிக்கும் பிரபலமான சமூக மேடை ஆகியவற்றின் மையமாக இருந்த மில் மெடோஸ் பகுதியில் இலங்கைக் கூடம் அமைந்திருந்தது.

பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் சரோஜா சிறிசேன மற்றும் பெட்போர்ட் நகரபிதா டேவ் ஹோட்சன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பெட்ஃபோர்ட் போரோ கவுன்சிலால் ஏற்பாடு செய்யப்படும் பெட்ஃபோர்ட் நதித் திருவிழா என்பது விளையாட்டு மற்றும் நதி நடவடிக்கைகள், தெப்பம் மற்றும் டிராகன் படகுப் போட்டிகள், நேரடி இசை மற்றும் நிகழ்ச்சிகள், கேளிக்கை, உணவு மற்றும் சந்தைக் கூடங்கள் உள்ளிட்ட பல நிகழ்வுகள் மற்றும் ஈர்ப்புகளைக்கொண்ட வருடாந்தக் கோடை விழாவாகும்.

இந்த ஆண்டு இந்நிகழ்வு 2 இலட்சத்து 50 ஆயிரம் பார்வையாளர்களை ஈர்த்தது.

# புசல்லாவை தேயிலைத் தொழிற்சாலையில் தீப்பரவல்; பெருந்தொகையான தேயிலைகளும் கருகி நாசம்





(க.கிஷாந்தன்)

புசல்லாவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரயிலன் தோட்டத்தில் அமைந்துள்ள தனியார் தேயிலை தொழிற்சாலையில் நேற்று முன்தினம் (26) இரவு 7.20 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக தொழிற்சாலை எரிந்து நாசமாகியுள்ளது.

தீயை அணைக்க புசல்லாவை பொலிஸாரும், பொது மக்களும் முயற்சித்தபோதிலும் தீயினால் தொழிற்சாலை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மின் ஒழுக்கின் காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்றும் தீ விபத்துக்கான காரணம் இதுவரை சரியாக கண்டறியப்படவில்லை என்பதுடன், சேத விபரங்களும் கணக்கிடப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தேயிலைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ காரணமாக, தொழிற்சாலையின் கட்டிடத்திற்கும் இயந்திரங்களுக்கும் பாரிய சேதம் ஏற்பட்டுள்ளதுடன் தயாரிக்கப்பட்டிருந்த பெருந்தொகை தேயிலையும் தீயில் கருகி நாசமாகியுள்ளது. இத் தீ விபத்து தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் புசல்லாவை பொலிஸார் தெரிவித்தனர்.

# பூனாகலையில் காட்டு யானைகளின் தொல்லையால் வாழ்வாதாரம் பாதிப்பு

## பாதுகாப்பு நடவடிக்கைகளை செய்து தர அப்பகுதி மக்கள் கோரிக்கை



(பலாங்கொடை நிருபர்)

ஹல்துமுல்லை பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பூனாகலை மூன்றாம் பிரிவு தோட்ட மக்கள் பல வருடங்களாக காட்டு யானை தொல்லைக்கு மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோட்டத்தில் சுமார் 400குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 500பேர் வரை வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பெரும்பாலும் தோட்டத் தொழிலையும் விவசாயத்தையும் தமது வாழ்வாதாரத் தொழிலாக செய்து வருகின்றனர்.

வனவிலங்கு தொல்லைகளின் சிரமத்துக்கு மத்தியில் விவசாயத்தில் ஈடுபட்டுவரும் அவர்கள், பல வருடங்களாக காட்டு யானை தொல்லைக்கும் முகம்கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாளாந்தம் இரவு வேளையில், அப்பகுதிக்கு வரும் காட்டு யானைகள் அப்பகுதியிலுள்ள விவசாய நிலங்களை சேதப்படுத்துவதுடன் தென்னை, வாழை, பலா மரம் போன்ற பயன்தரு பல மரங்களையும் சேதப்படுத்திச் செல்கின்றது. காட்டு யானை பிரச்சினை தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் தெரிவித்திருந்தபோதிலும், உரிய அதிகாரிகள் இதுவரை காலமும் எந்தவிதமான பாதுகாப்பு நடவடிக்கையும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த 23ஆம் திகதியும் இரவு அப்பகுதிக்கு வந்த காட்டு யானை வாழை, அன்னாசி போன்றவற்றை சேதப்படுத்தியதுடன் விவசாய நிலங்களையும் சேதப்படுத்திச் சென்றுள்ளது.

எனவே, குறித்த அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி தமது வாழ்வாதாரத்தை பாதுகாத்து தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# ஆசிரிய உதவியாளர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

## ம.மா.ச.முன்னாள் உறுப்பினர் கணபதி கனகராஜ்



(தலவாக்கலை நிருபர்)

மத்திய மாகாணத்தில் கோவைகள் முழுமை பெறவில்லை என்பதனால் நிரந்தர நியமனம் வழங்கப்படாமல் இருந்த ஆசிரிய உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், இ.தொ.கா. கல்வியல் ஒன்றியத்தின் தலைவருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

3000 ஆசிரிய உதவியாளர்களை ஆசிரியர் சேவையில் உள்வாங்கும் வேலைத்திட்டத்தில் கோவைகள் பூர்த்தி செய்யப்படாததால் சுமார் 35பேரின் நியமனங்கள் இன்னும் வழங்கப்படாமல் உள்ளன. இது தொடர்பாக கடந்த 25ஆம் திகதி மத்திய மாகாண ஆளுநருடன் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது மத்திய மாகாண சபையின் தலைவர் துரைமதியுக ராஜாவும் கலந்துகொண்டிருந்தார். மத்திய மாகாண கல்வி அமைச்சிலிருந்து கிடைத்த தகவல்களின்படி 18 கோவைகள் மட்டுமே முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும், எஞ்சியவை இதுவரை மத்திய மாகாண கல்வி அமைச்சுப் பிரிவுக்கு வந்து சேரவில்லை எனவும், அதன் செயலாளர் இது தொடர்பாக வினவிய ஆளுநருக்கு பதிலளித்தார்.

ஆகவே, இதுவரை நியமனம் கிடைக்காத ஆசிரிய உதவியாளர்கள் தமது கோவைகளை பூர்த்தி செய்து அது மத்திய மாகாண கல்வி அமைச்சுக்கு கிடைத்து விட்டதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும் கணபதி கனகராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தொழில்நுட்ப பயிற்சி பாடசாலை அபிவிருத்தி



(கண்டி நிருபர்)

கண்டி, மாப்பனாவத்துர என்ற இடத்தில் இயங்கும் தொழில்நுட்ப பயிற்சி பாடசாலையை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடலொன்று கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் நேற்று(27) இடம்பெற்றது.

இதன்போது, தொழில்நுட்ப பயிற்சி பாடசாலையை அபிவிருத்தி செய்து சுயதொழில் மற்றும் தொழில்நுட்பத்துறையில் மாணவர்களை மேலும் வளப்படுத்தும் முகமாக மத்திய மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார். மேலும், இதுதொடர்பாக அதிகாரிகளுடனான கலந்துரையாடலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.









**மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட சாமிமலை, கவரவிலை தோட்டத்தில் வசிக்கும் 395குடும்பங்களுக்கு வீட்டுத்தோட்டத்தில் விவசாயம் மேற்கொள்ள ஐ.எம்.எச்.ஓ. என்ற தொண்டு நிறுவனத்தின் மூலம் பெருந்தொகையான விதைகள் வழங்கப்பட்டன. இதன்போது தொண்டு நிறுவன இயக்குநர் மற்றும் கவரவிலை தோட்ட முகாமையாளர், உதவி முகாமையாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.**
**(படங்கள்:- செ.தி.பெருமாள்)**

# வெலிக்கடை சிறைப் படுகொலை: 39ஆவது ஆண்டு நினைவு மன்னாரில் அனுஷ்டிப்பு












(மன்னார் நகர் நிருபர்)

வெலிக்கடை சிறைப் படுகொலையின் 39ஆவது ஆண்டு நினைவு தினமான தமிழ் தேசிய வீரர்கள் தினம் மன்னார் மாவட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (TELO) அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை (27) காலை 11 மணியளவில் நினைவு கூரப்பட்டது. தமிழீழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கதுரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளிகளான ஜெகன், தேவன் உட்பட 53 அரசியல் கைதிகளின் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது கட்சியின் முக்கியஸ்தர், நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.வினோ நோகராதலிங்கம், கட்சியின் உறுப்பினர்கள், ஈ.பி.ஆர்.கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். பல்கலைக்கழக பகிடிவதை தொடர்பில்

# சந்தேகத்தின்பேரில் சிரேஷ்ட மாணவர்கள் 18 பேருக்கு தற்காலிக வகுப்புத் தடை

(யாழ். நிருபர்)

யாழ். பல்கலைக்கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மாணவர்கள் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட காலத்திற்கு குறையாத வகுப்புத்தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தின் புதுமுக மாண வர்களை ஒன்றுகூடல் எனும் பெயரில் யாழ்ப்பா ணம் தெல்லிப்பழை பகுதிக்கு அழைத்து பகிடிவதைக்கு உட்படுத்தப்படுவதாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ்க்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம் அது தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளரால் பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து சட்ட நிறைவேற்று அதிகாரி, மாணவர் ஆலோசகர் மற்றும் மாணவர் ஒழுக்காற்று அதிகாரி உள்ளிட்ட குழுவினர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று புதுமுக மாணவர்களை சிரேஷ்ட மாணவர்களிடமிருந்து மீட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்க ஏதுவாக சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் சிரேஷ்ட மாணவர்கள் 18 பேருக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் தனது பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. புதுமுக மாணவர்களின் வாக்குமூலங்களை பெறுவதற்கான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

பூர்வாங்க விசாரணைகளின் அடிப்படையில், குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். அதனடிப்படையில் குற்றவாளிகளாக காணப்படும் மாணவர்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் 2 வருட காலத்திற்கு குறையாத வகுப்புத்தடை விதிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

# கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியில் கிளிநொச்சியில் இரண்டுமாடிக் கட்டடம் திறப்பு








(கிளிநொச்சி நிருபர்)

கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியில் கொய்கா திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தின் இரண்டுமாடிக் கட்டடம் திறந்துவைக்கும் நிகழ்வு பாடசாலையின் முதல்வர் ஜோய் பியசீலன் தலைமையில் இடம்பெற்றது.

32 பாடசாலைகளுக்கு சுமார் 270 மில்லியன் ரூபா செலவில் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அந்தவகையில் நேற்று முன்தினம் (26) கிளிநொச்சி முக்கொம்பன் மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டிடம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

குறித்த வகுப்பறைக்கட்டடம் ஆய்வுகூடம், நூலகம் அடங்கலான அனைத்து வசதிகளையும்கொண்ட கட்டடமாக அமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் 2014ஆம் ஆண்டிலிருந்து கல்விக்கான உதவிகளை கொரிய அரசு மிகவும் திறம்பட செய்து வருகிறது என்று கொரிய துதுவர் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில் முன்னதாக பிரதம விருந்தினர்கள் பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்தியம் மற்றும் காவடி, கும்மி போன்ற கிராமிய கலைகளோடு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து கொய்கா திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட வகுப்பறை கட்டடத்தின் பெயர்ப்பலகையை வடமாகாண ஆளுநர் மற்றும் கொரியத் தூதுவர் இணைந்து திறந்துவைத்தனர்.

குறித்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இலங்கைக்கான கொரிய நாட்டுத்தூதுவர் H.E SANTHUSH WOONJIN JEONG, யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி EMMA BRIGNAM, வடமாகாண பிரதம செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், கொய்கா திட்டத்தின் பிரதிநிதிகள், வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர், வலயக்கல்விப் பணிப்பாளர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்தல் சம்மேளனத்துடன் ஒத்துழைப்பை மேம்படுத்த மிலிந்த கலந்துரையாடல்




புதுடில்லிக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட தலைமையிலான உத்தியோகபூர்வ பிரதிநிதிகள் குழுவொன்று அமுல் என பிரபலமாக அறியப்படும் குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்தல் சம்மேளனத்துடனான கலந்துரையாடலொன்று கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்தியாவின் ஒத்துழைப்புடன் தனது பால் உற்பத்தித் தொழிலை மேம்படுத்துவதற்கான வழிகளையும் வழிமுறைகளையும் இலங்கை நாடியது.

அமுலின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ஆர்.எஸ்.சோதி இந்தியாவில் பதவியேற்ற பின்னர், குஜராத் மாநிலத்திற்கு முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட உயர்ஸ்தானிகர் மொரகொட, 22ஆம் திகதி ஆனந்த் நகரிலுள்ள கூட்டமைப்பின் தலைமையகத்தில் கலந்துரையாடினார்.

மாநில அதிகாரிகள் மற்றும் சாத்தியமான முதலீட்டாளர்களை சந்திப்பதற்காக உயர்ஸ்தானிகர் மொரகொட இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக குஜராத் மாநிலத்திற்கு சென்றிருந்தார்.

அமுல் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தலைமையிலான குழுவுடனான கலந்துரையாடலின்போது, அமுல் பால் பொருட்களை தற்போதுள்ள இந்திய கடன் வரி மூலம் இறக்குமதி செய்வதிலும், பாலில் தன்னிறைவை உறுதிசெய்யும் நோக்கில் இலங்கையில் அமுல் கூட்டுறவு மாதிரியை பிரதியெடுப்பதிலும் விசேட கவனம் செலுத்தி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பால்வளத்துறை ஒத்துழைப்பு குறித்து கவனம் செலுத்தப்பட்டது. அமுல் நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் எருமை வளர்ப்பை பால் ஆதாரமாக இலங்கைக்கு அறிமுகப்படுத்துவது குறித்தும்



கலந்துரையாடப்பட்டது. இந்தியாவில், நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் எருமைப் பால் 45 சதவீதமாகும். அதேசமயம் அமுலின் மொத்த பால் உற்பத்தியில் 55 சதவீதம் எருமைகளிலிருந்தே வருகின்றது.

கலந்துரையாடலைத் தொடர்ந்து, பால் பொதியிடல் மற்றும் ஏனைய பால் உணவுகளின் உற்பத்தி நடைபெறுகின்ற ஆனந்தில் உள்ள கைரா மில்க் யூனியன் பால் ஆலைக்கு உயர்ஸ்தானிகர் மற்றும் தூதுக்குழுவினர் விஜயம் செய்தனர்.

சிறு நகரங்களில் வணிகர்கள் மற்றும் முகவர்களால் விளிம்பு நிலை பால் உற்பத்தியாளர்களை சுரண்டுவதற்குப் பதில் கூட்டுறவு சங்கமாக 1946 இல் உருவாக்கப்பட்ட அமுல், காலனித்துவ எதிர்ப்பு உணர்வுகள் மற்றும் இந்தியாவின் சுதந்திர இயக்கத்துடன் நெருக்கமாக தொடர்புடையது. இன்று, அமுல் குஜராத்தில் 18,565 கிராமங்களில் 3.6 மில்லியன் பால் உற்பத்தியாளர்களால் கூட்டாகக் கட்டுப்படுத்தப்படுகின்றது. இந்த கிராம கூட்டுறவுகள் பதின்மூன்று பால் சங்கங்களை உருவாக்குவதுடன், குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு நிறுவனம் அந்த பால் சங்கங்களின் உச்ச அமைப்பாக செயற்படுகின்ற அதேவேளை, கூட்டுறவு நிர்வாகத்தையும் நிர்வகிக்கின்றது. கூட்டமைப்பு இந்தியாவின் மிகப்பெரிய உணவுப்பொருட்களை சந்தைப்படுத்தும் அமைப்பாகும்.

அமுல், இந்தியாவின் வெள்ளைப் புரட்சியை அல்லது பாலில் தன்னிறைவை அடைந்து கொள்வதற்காக பால் பற்றாக்குறை உள்ள நாடாக இருந்து இந்தியாவை உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக மாற்றியதுடன், 1998ஆம் ஆண்டில் அமெரிக்காவை விஞ்சியது. இது இந்தியா முழுவதும் அமுல் மாதிரியைப் பிரதிபலிப்பதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

சுதந்திரப் போராட்ட வீரரும், இந்தியாவை ஒருங்கிணைத்தவருமான சர்தார் வல்லபாய் படேலின் வழிகாட்டுதலின்கீழ், திரிபுவன்தாஸ் கிஷிபாய் படேல் இந்த அமைப்பின் நிறுவனத் தலைவராகி, 70களில் ஓய்வு பெறும்வரை அதை வழிநடத்தினார். அமுலின் மகத்தான வெற்றிக்குப் பின்னால் இருந்தவர் எனக் கருதப்படும் கலாநிதி வர்கீஸ் குரியன், 1949இல் அதன் பொது முகாமையாளராக நிறுவனத்தில் இணைந்து, பின்னர் 1973இல் குஜராத் கூட்டுறவு பால் சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு நிறுவனத்தின் நிறுவனத் தலைவராகி 2006 வரை அப்பதவியை வகித்தார்.

அமுல் தலைமையகத்திற்கான தனது விஜயத்தின்போது, உயர்ஸ்தானிகர் மொரகொட, சர்தார் வல்லபாய் படேல், திரிபுவன்தாஸ் கிஷிபாய் படேல் மற்றும் கலாநிதி வர்கீஸ் குரியன் ஆகியோரின் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஒலிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்திய நபரொருவர் கைது

இலங்கை தேசிய தொலைக்காட்சி ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பு நடவடிக்கைகளுக்கு கடந்த 13ஆம் திகதி இடையூறு ஏற்படுத்த முயன்ற சந்தேக நபர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் (26) பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

31 வயதான குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த இந்த சந்தேக நபர் வெளிநாட்டுக்கு தப்பிச் செல்ல முற்பட்டபோதே கைசெய்யப் பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர் தற்போது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அதிகாரிகளினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், தொடர்புடைய ஏனையவர்களிடமும் விசாரணைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.






வன்முறைத் தீவிரவாதத்தை ஒழிப்பது தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் பலவற்றை கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு மேற்கொண்டு வருகிறது. அதில் ஓர் அங்கமாக தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன் அக்குறணை நகரத்தில் (27) நடத்திய வீதி நாடகத்தின் ஒருகட்டத்தையும், பார்வையாளர் களையும் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு: கண்டி செய்தியாளர்)

# வஜிர அபேவர்தன நாடாளுமன்ற உறுப்பினராகச் சத்தியப்பிரமாணம்




ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக வஜிர அபேவர்தன, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று (27) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட பின்னர் நாடாளு மன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க முன்னிலையில் உள்ள நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்ப மிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் ஏற்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் 1994ஆம் ஆண்டு தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்தில் முதல் தடவையாக இலங்கை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். அன்றிலிருந்து 2010ஆம் ஆண்டுவரை அபேவர்தன ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்திலிருந்து தொடர்ச்சியாகப் நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டார். அதன்பின்னர் 2015ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் காலி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மீண்டும் அவர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார்.

அத்துடன், அவர் பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சராகவும், பொது நிர்வாக, முகாமைத்துவ மற்றும் மறுசீரமைப்புத் திட்டங்கள் அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார். அத்துடன், அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகவும் தற்பொழுது செயற்பட்டு வருகிறார்.

1961.09.02ஆம் திகதி பிறந்த வஜிர அபேவர்தன, காலி மஹிந்த வித்தியாலயத்தில் கல்வியைப் பெற்றார். அத்துடன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

# எரிபொருள் வரிசையில் காத்திருந்த மற்றுமொருவர் மரணம்

மாத்தளையில் பெற்றோல் வரிசையில் நின்ற ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளதாக மாத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாத்தளை, கிவுல பண்டாரபொல பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த நபர் இரண்டு நாட்களாக எரிபொருள் வரிசையில் காத்திருந்ததாக எரிபொருள் வரிசையில் நின்றவர்கள் தெரிவித்தனர்.

# மினுவாங்கொடை பிராந்திய முஸ்லிம் விவாகப் பதிவாளராக ரிஸ்வான் நியமனம்



(ஏ. சி பௌசுல் அலீம்)

மினுவாங்கொடை பிராந்திய முஸ்லிம் விவாகப் பதிவாளராக அஷ்ஷேக் எம்.ஆர்.எம்.ரிஸ்வான் (ரஹ்மானி) நியமிக்கப்பட்டுள்ளார்.

உதுரு அலுத்குருகோரளை (வடக்கு) மினுவாங்கொடை பிராந்திய முஸ்லிம் விவாகப் பதிவாளராக கல்லொழுவையைச் சேர்ந்த அஷேக் மௌலவி முஹம்மது ரஃபீக் முஹம்மது ரிஸ்வான் ( ரஹ்மானி) நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டு காலமாக வெற்றிடமாக இருந்த இப்பதவிக்கு மௌலவி ரிஸ்வான் இம்மாதம் 20ஆம் திகதி நியமிக்கப்பட்டார். 49 வயதான ரிஸ்வான் மௌலவி கல்லொழுவை அல்-அமான் முஸ்லிம் மகாவித்தியாலய பழைய மாணவராவார். மார்க்க கல்வியை அரபு கலாபீடத்தில் கற்றுத் தேர்வு தெரிந்தவர்.

இவர் கம்பஹா மாவட்ட ஜம்மியத்துல் உலமாவின் உப தலைவராகவும் கொழும்பு - 2, ரில்வானியா அரபுக் கல்லூரி போதன ஆசிரியராகவும் பணிபுரிகிறார்.

கல்லொழுவை ஜும்மா பள்ளிவாசலின் மத்திச்சமாக இருந்த மர்ஹூம் நூஹ் லெப்பை மஹ்தூம் மத்திதசின் பேரனான மௌலவி ரிஸ்வான் நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

இவரவது நியமனத்தின் மூலம் கல்லொழுவை மினுவாங்கொடை கோபிவத்தை, கோவின்ன ஆகிய ஊர்களில் வாழும் முஸ்லிம் ஜமாத்தார்களின் நீண்ட காலமாக தடைப்பட்டிருந்த முஸ்லிம் விவாகப் பதிவு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

# கண்டியில் தொழில்நுட்ப பயிற்சிப் பாடசாலை

## ஆளுநர் அலுவலகம் நடவடிக்கை

கண்டி, மாப்பனாவத்துர என்ற இடத்தில் இயங்கும் தொழில்நுட்பப் பயிற்சி பாடசாலையை அபிவிருத்திசெய்து சுயதொழில் மற்றும் தொழில்நுட்பத்துறையில் மாணவர்களை மேலும் வளப்படுத்தும் முகமாக மத்திய மாகாண கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யு கமகே தலைமையில் கண்டியிலுள்ள ஆளுநர் காரியாலயத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

குறித்த திட்டத்தை விரைவாக நடைமுறைப் படுத்துதல் தொடர்பில் இதன்போது விசேட அவதானம் செலுத்தப்பட்டது.





திகதி 26.07.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 4828
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.7,347,680.00
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 0 5 9 6 5 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.25,453,844.20

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3070
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,241,240.00
ஆங்கில எழுத்து K வெற்றி இலக்கங்கள் 02 20 48 72
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.65,423,101.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1306
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,490,600.00
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள் 9 2 2 4 2 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,575,634.00

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 858
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,012,720.00
வெற்றி இலக்கினம் S வெற்றி இலக்கங்கள் 05 22 27 71
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 119,064,773.60

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 137
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,027,560.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 05 25 29 43
விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.3,347,372.80

கோடி 26+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1176
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,393,180.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.262,546,518.00
R 26 09 70 78 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.U.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# ஓட்டமாவடி கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிலையத்தில் புதிய மென்பொருளை உருவாக்கி விநியோக நடவடிக்கை

## பதுக்கிவைப்பதைத் தவிர்க்க முடிவதாக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹாதி தெரிவிப்பு

(கல்குடா நிருபர்)

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவரும் நிலையில், கிடைக்கின்ற எரிபொருளை சிறப்பாக சகல தரப்பினருக்கும் கிடைக்கும் வகையில் பல்வேறு நடைமுறைகள் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டு எரிபொருள் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

பல எரிபொருள் நிலையங்கள் தமது எரிபொருள் விநியோக ஏற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டாலும் பல்வேறு குறைபாடுகளும் குற்றச்சாட்டுகளும் தொடர்ந்தவண்ணம் இருப்பதுடன், மக்கள் நீண்டநாட்கள் காத்திருப்பது தொடராக காணப்படுகின்றது. இருப்பினும், நாட்டிலுள்ள ஒருசில தனியார் மற்றும் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தமது சக்திக்குட்பட்டு விநியோகத்தை மேற்கொண்டு பாராட்டையும் பெற்றுக்கொண்டுள்ளது.

அந்தவகையில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் அஸ்மி ஆதம்லெவ்வையின் ஆலோசனையில் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கே.வி.தங்கவேலின் வழிகாட்டலில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.ஏ.ஹாதியின் மேற்பார்வையில் ஓட்டமாவடி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் தலைவர் எம்.எம்.ஜெஸ்லின் தலைமையில் நிர்வாக சபை மற்றும் ஊழியர்களின் பங்களிப்புடன் எரிபொருள் விநியோகச் செயற்பாடு தொடர்பில் பாராட்டு








தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து இவ்வாறான நடைமுறைகள் பின்பற்றப்படுமாக இருந்தால் வீண் அசௌகரியங்கள் தவிர்க்கப்படுவதோடு, குற்றச்சாட்டுகளையும் தவிர்த்துக்கொள்ள முடியும். சீரான எரிபொருள் விநியோகத்திற்கு தமக்கான ஒரு மென்பொருளை உருவாக்கி 1250இற்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு மக்கள் சஞ்சலம் ஏதுமின்றி எரிபொருள் வழங்கி வருகின்றனர்.

முதல் நாளே வாகனங்கள் பார்க் பண்ணப்பட அவ்விடத்தில் டோக்கன் வழங்கி அனுப்பி வைத்தல். மறுநாள் எரிபொருள் நிரப்பு வளாகத்திற்குள் அனுமதியற்ற எவருமே நுழைய முடியாதபடி தடுப்புகளை ஏற்படுத்தல். எரிபொருள் நிரப்புவதற்கு டோக்கன் தொடரிலேயே உள்நுழைபவர் தேவையற்ற எந்தப் பரிசோதனையுமின்றி டோக்கனை மாத்திரம் நுழைவிடத்திலே வாங்கிக்கொள்ளல். வாகனம் நுழைகின்றபோதே கணினி இயக்குனர் வாகன இலக்கத்தகட்டை பார்த்து அதனை கணினிப்படுத்தி பதிவு வைத்தல். சகலருக்கும் அரசாங்க நியதிப்படி 1500, 2000, 7000 என எரிபொருள் வழங்குதல். இதனூடாக குறித்த வாகனம் இதற்கு முதல் தங்களிடம் எரிபொருள் அந்த வாரத்தில் பெற்றுள்ளதா என்பதை பரிசீலிக்க முடியுமாதல். அவர்களது எரிபொருள் இருப்பினை உடனுக்குடன் அறிந்துகொள்ள முடிவது. தேவையற்ற கெடுபிடிகள் பரிசீலனை, கேள்விகளின்றி மக்களின் தனிமனித (சுய) கௌரவம் பாதுகாக்கப்படுகிறது. சமத்துவம் பேணப்பட்டது.

இவ்வாறான முறையூடாக எரிபொருள் பதுக்கலைத் தடுக்க முடிவதுடன், குறித்த சில நபர்கள் மீண்டும் மீண்டும் வருவதை நிறுத்த முடிந்ததைக் காணலாம். குறிப்பாக, குடும்ப அட்டை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன், எந்தவொரு பிற நிறுவன உத்தியோகத்தர்களும் அந்த இடத்தில் பரிசீலனை என்ற போர்வையில் செயற்படும் தேவை இருக்கவில்லை. மேற்படி விடயங்கள் முற்றுமுழுதாக ஓட்டமாவடி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் மேற்பார்வையில் இடம்பெற்று வருவதாக கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.எம்.ஏ.ஹாதி தெரிவித்தார்.

அத்துடன், நோயாளிகளின் வைத்திய தேவை கருதியும் மத வழிபாட்டுத் தலங்களில் கடமை புரிகின்றவர்களுக்கும் எரிபொருள் விநியோகம் இடம்பெற்றதோடு, பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களில் கடமை புரிவோரின் தகவல்களை உரிய விதத்தில் வழங்கும் பட்சத்தில் அவர்களால் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வாய்ப்பாக அமையும்.

அதேநேரத்தில் பின்னூட்டமிட்டவர்கள் சீர்செய்யப்படவேண்டிய தவறுகள் தொடர்பிலும் பல்வேறு ஆலோசனைகளையும் தெரிவித்துள்ளனர். அதில் பொருத்தமானவைகளையும் கவனத்திற்கொள்ளுமிடத்து மேலும் சிறப்பான சேவையை முன்னெடுக்க முடியும் என பிரதேச சமூக ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

# கதிர்காமம் யாத்திரையில் மாணவர்களை ஈடுபடுத்தவேண்டாம் என கோரிக்கை

## பாண்டிருப்பு அகரம் சமூக அமையம்

(பாண்டிருப்பு நிருபர்)

இலங்கையில் பிரசித்திபெற்ற கதிர்காமம் முருகன் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகியுள்ள நிலையில், நாட்டின் நாலாபாகங்களிலிருந்தும் முருக பக்தர்கள் கால்நடையாக பாதயாத்திரையில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், பாதயாத்திரைகளில் ஈடுபடும் அடியார்கள் பாடசாலை செல்லும் மாணவர்களை யாத்திரையில் இணைத்துக்கொள்ளாது இருக்குமாறும் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் அம்பாறை பாண்டிருப்பு அகரம் சமூக அமையம் யாத்திரிகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போது ஆடி அமாவாசை தீர்த்த உற்சவத்தை முன்னிட்டு நாட்டிலுள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களின் வருடாந்த உற்சவங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன. இதற்கமைய கதிர்காமக் கந்தன் உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. முருக பக்தர்கள் பலர் தற்போது பாதயாத்திரையில் ஈடுபட்டும் வருகின்றனர். இப்பாதயாத்திரையில் அதிகளவிலான பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களை காணக்கூடியதாகவுள்ளது.

கடந்த பல வருடங்களாக கொரோனா தொற்று மற்றும் அரசியல் பொருளாதார நெருக்கடி காரணமாக மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

தற்போது மிக நீண்டநாட்களின் பின்னர் குறைந்தளவு பாடசாலை நாட்களைக்கொண்டதாக மீண்டும் பாடசாலைகள் ஆரம்பமாகியுள்ளன. பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கையில் கூடியளவு அக்கறையுடன் செயற்படவேண்டும். இதற்கமைய மாணவர்களை பாதயாத்திரை போன்ற விடயங்களில் இணைத்துக் கொண்டால் பிள்ளைகளது கல்வியே பாதிக்கப்படும். அரசாங்கம் வாரத்தில் மூன்று தினங்களே பாடசாலைகளை நடத்திவருகின்றன. சில பாடசாலைகளில் பரீட்சைகளும் நடைபெறுகின்றன. இதனை கருத்திற்கொண்டு பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் அக்கறை செலுத்துமாறு அகரம் சமூக அமையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# எரிபொருள் விடயத்தில் பிழையான தகவலை வழங்கி அரசும் அமைச்சர்களும் மக்களை ஏமாற்றி வருகின்றனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்

(திருகோணமலை, கிண்ணியா, கந்தளாய் நிருபர்கள்)

எரிபொருள் விடயத்தில் அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அமைச்சரும் பிழையான தகவல்களை அவ்வப்போது வழங்கி நாட்டுமக்களை ஏமாற்றி வருகின்றனர் - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ராஜபக்ஷக்களின் கடந்தகால பிழையான பொருளாதாரக் கொள்கை காரணமாக நாட்டில் கடந்த சில மாதங்களாக எரிபொருளுக்குப் பாரிய தட்டுப்பாடு நிலவி வருகின்றமையை நாட்டுமக்கள் நன்கு அறிவர். எனினும், இதனை மறைப்பதற்காக அரசாங்கமும், எரிபொருள் துறை அமைச்சரும் அவ்வப்போது பிழையான தகவல்களை வழங்கி வருகின்றனர்.

நாட்டில் எரிபொருள் போதியளவு உள்ளது. அதனை ஒழுங்குமுறைப்படி வழங்கலாம் என்ற மாயையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக டோக்கன் முறையைக் கொண்டு வந்தனர். பின்னர் அதனை இரத்துச் செய்தனர். அடுத்து வாகனத்தின் கடைசி இலக்க முறை, அதன்பின் கியூஆர் முறை, இப்போது முச்சக்கரவண்டிகளை பொலிஸில் பதிவு செய்தல் என அடிக்கடி திட்டங்களை மாற்றி மக்களை சிரமப்படுத்தி வருகின்றனரே தவிர, சீரான எரிபொருள் விநியோகம்



செயபப்படவில்லை. நீண்ட வரிசைகளைக் குறைப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒரு மாதத்திற்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளதாக அரசு கூறுகின்றது. அதேவேளை, அடுத்துவரும் 12 மாதங்களுக்கு எரிபொருள் பெறுவதில் சிரமம் இருப்பதாக எரிபொருள்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையிலேயே பாடசாலைகளை 3 நாட்களுக்கு நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே அரச உத்தியோகத்தர்களை அலுவலகங்களுக்கு அழைப்பதற்கான மட்டுப்பாடு அடுத்து ஒரு மாதத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. போதுமான எரிபொருள் இருந்தால் இந்த மட்டுப்பாடுகள் தேவையில்லை.

இப்போது திடீரென மீண்டும் கொரோனா கதை வெளிவருகின்றது. நாட்டுமக்களுக்கு 3 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதால் கொரோனா அச்சமில்லை என்று பெருமிதமாகக் கூறினார்கள். இதனால் கொரோனா தொடர்பான பரிசோதனைகளை மட்டுப்படுத்திவிட்டதாகவும் அறிவித்திருந்தார்கள்.

இந்நிலையில் புதிய தொற்றாளர்களும், மரணங்களும் எவ்வாறு கண்டறியப்படுகின்றன என்ற கேள்வி எழுகின்றது. எரிபொருள் பிரச்சினையால் நாட்டை முன்கொண்டுசெல்ல இந்த அரசாங்கத்தினால் முடியவில்லை. அதனை சமாளிப்பதற்காக மீண்டுமொரு தடவை நாட்டை முடக்க அரசாங்கம் தயாராகி வருவதாலேயே கொரோனா கதையை எடுத்துள்ளதா என்ற சந்தேகம் எழுகின்றது.

இதிலிருந்து தெளிவாக விளங்குவது என்னவெனில், நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை இப்போதைக்கு தீரப்போவதில்லை. அடுத்த வருடமும் அது நீண்டுசெல்லப் போகின்றது என்பதுதான். ராஜபக்ஷக்கள் அதிகாரத்தில் இல்லாதபோதிலும் அவர்களது கட்சியின் ஊடாக இன்னும் அவர்கள் செல்வாக்கு செலுத்தி வருகின்றனர் என்பதை ஜனாதிபதித் தெரிவின்போதும், புதிய அமைச்சரவை நியமனத்தின்போதும் நாம் கண்டுள்ளோம்.

நாட்டை மிக மோசமான நிலைக்கு கொண்டுவந்தோர் தொடர்ந்து அதிகாரத்தில் இருந்தால் இதே நிலை தொடர்ந்துவரும் என்பது தவிர்க்க முடியாதது. எனவே, புதிய சிந்தனை ஊடாக நாட்டை மீளக் கட்டியெழுப்ப ஆட்சிமாற்றமொன்றின் அவசியம் இப்போது உணரப்படுகின்றது என அவர் தெரிவித்தார்.

# நற்பிட்டிமுனை பொதுச்சந்தையின் அவலம் குறித்து மாநகர சபை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்

(மாளிகைக்காடு நிருபர்)

அம்பாறை மாவட்டம், கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட கல்முனை மாநகர சபைக்கு சொந்தமான நற்பிட்டிமுனை பொதுச் சந்தையின் அவலம் குறித்து மாநகர சபையின் சொத்துக்குப் பொறுப்பான மாநகரத்தின் ஆணையாளர் அறிந்திருந்தும் கண்மூடித்தனமாக நடந்துகொள்வதுடன், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முன்வராமல் இருக்கிறாரென நற்பிட்டிமுனை பொதுச்சந்தை வர்த்தகர்களும் ஊர் பொதுமக்களும் குற்றம் சுமத்துகின்றனர்.

நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு தமிழ், முஸ்லிம் மக்கள் பரவலாக பாவித்துவரும் சந்தையின் நீர்த்தாங்கி பல மாதகாலமாக உடைந்து சேதமடைந்துள்ளதால் மீன் சந்தை மற்றும் மலசலகூடம் கழுவி சுத்தம் செய்யப்படாமையால் துர்வாடை வீசுவதாகவும் தொற்றுநோய் பரவும் ஆபத்து காணப்படுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.



மேலும் ஒரு மாதத்துக்கும் மேலாக அங்குள்ள திண்மக்கழிவுகள் அகற்றப்படாமையினால் அங்கு தேங்கியுள்ள கழிவுகளால் பாரிய சூழல் பாதிப்பும் ஏற்பட்டுள்ளது. மாநகர முதல்வர், ஆணையாளர், இந்த ஊரை பிரதிநிதித்துவப்படுத்தும் மாநகர சபை உறுப்பினர் சீ.எம்.முபீத் ஆகியோர் நற்பிட்டிமுனை மக்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வை பெற்றுத்தர முன்வரவேண்டும் என்று மக்கள் கேட்டுக்கொள்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கலைஞர்களுக்கு பயிர்கள் விநியோகம்

## ஏறாவூர் பிரதேச செயலகத்தில் முன்னெடுப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

நாடு தற்போது எதிர்கொண்டுள்ள உணவுப் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில் உப உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்காக கலைஞர்களுக்கு மரக்கறிப் பயிர்நாற்றுகள் விநியோகம் செய்யப்பட்டு வருவதாக ஏறாவூர் நகர விவசாய விரிவாக்கல் பிரிவின் போனாசிரியை எம்.எச்.முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர பிரதேசத்திலுள்ள கலையாற்றல்மிக்க பல்துறைக் கலைஞர்களுக்கு கத்தரி மற்றும் மிளகாய் நாற்றுகளை வழங்கும் நிகழ்வு ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் நேற்று (27) இடம்பெற்றது.

அங்கு நிகழ்வை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய விவசாயப் போதனாசிரியை உண்மையில் சிறந்த வீட்டுத் தோட்டத்தை அமைக்கக்கூடியவர்கள் கலையுணர்வுகொண்ட கலைஞர்கள்தான். இந்தியக் கலைஞர்கள் இதனை நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். போதியளவு நிலப்பரப்புக் குறைந்த பிரதேசமாக இருக்கின்ற இடங்களிலும் நமக்குத் தேவையான அளவு மரக்கறிப் பயிர்களை விளைவிக்க தோதான பல மாற்றுவழிகள் உள்ளன. நகர பிரதேச வீட்டுத் தோட்டத்தை சிறப்பாகச் செய்து அறுவடையை நிரூபித்துக் காட்டி வெற்றியடைந்த விவசாயிகளும் ஏறாவூர் நகர பிரதேசத்தில் உள்ளார்கள்.



எனவே, இத்தகைய முன்மாதிரி களை அடிப்படையாகக்கொண்டு கலைஞர்களாகிய நீங்களும் உணவு உற்பத்திக்காக நமக்குத் தேவையான உணவுப் பொருட்களை நாமே உற்பத்திசெய்து தன்னிறைவு அடையவேண்டும் - என்றார்.

இந்நிகழ்வில் ஏறாவூர் நகர உதவிப் பிரதேச செயலாளர், கலாசார உத்தியோகத்தர்கள் பயனாளிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வுகாண திருமலையில் முச்சக்கரவண்டிகளை பதிவுசெய்யும் நடவடிக்கை





(திருகோணமலை நிருபர்)

எரிபொருள் பிரச்சினையைக்குத் தீர்வுகாணும் நோக்கில் முச்சக்கரவண்டிகளை பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்து பதிவு ஸ்ரிக்கர் வழங்கும் நிகழ்வு திருகோணமலையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

அந்தவகையில் திருகோணமலை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரதேசங்களிலுள்ள உவர்மலை, மட்கோ, லிங்கநகர் மற்றும் அபயபுர ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த முச்சக்கரவண்டி சாரதிகளது வாகனங்களை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் நேற்று (27) காலை திருகோணமலை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்தபகுதிகளைச் சேர்ந்த பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கு அருகிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் பெறுவதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், முச்சக்கரவண்டி ஓட்டுனர்கள் தமது வாகனங்களை முன்கூட்டியே பதிவுசெய்து தமது ஸ்ரிக்கர்களை பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஏனைய கிராமசேவகர் பிரிவுகளுக்கு எதிர்வரும் நாட்களில் தொடர்ச்சியாக இத்திட்டம் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தபடும் என பொலிஸார் தெரிவித்தனர்.

# தன்னாமுனை மோட்டார்சைக்கிள் விபத்தில் சகோதரர்கள் இருவர் பலி!



(மண்முனை,மட்டக்களப்பு நிருபர்கள்)

மட்டக்களப்பு தன்னாமுனையில் நேற்று முன்தினம் (26) வாகன விபத்தில் மோட்டார்சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பி இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏறாவூர் பகுதியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் முன்னால் சென்ற முச்சக்கரவண்டியை முந்திச்செல்ல முற்பட்டபோது முச்சக்கரவண்டியுடன் மோதிய நிலையில், மட்டக்களப்பிலிருந்து ஏறாவூர் நோக்கி பயணித்த கனரக வாகனத்தில் (லொறியுடன்) மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்து மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியில் தன்னாமுனைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்திலேயே குறித்த இரு இளைஞர்களும் உயிரிழந்துள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு சத்துருகொண்டான் பகுதியைச் சேர்ந்த இரு சகோதரர்களான 19 மற்றும் 21 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.



குறித்த லொறியின் சாரதியை ஏறாவூர் பொலிஸார் கைதுசெய்துள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தென்கிழக்குப் பல்கலையில் கவனயீர்ப்புப் போராட்டம்







(பைஷல் இஸ்மாயில்)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் ஸ்திரத்தன்மையைக் கண்டித்து நேற்று முன்தினம் (26) இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டதுடன், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் ஆட்சிமாற்றமொன்று அவசியம் தேவை என்ற அடிப்படையில் இப்போராட்டம் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசார் ஊழியர்கள் மற்றும் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டது.

இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தின்போது சுமுகமான அரசியல் கலாசாரம் ஏற்படுத்தப்பட்ட வேண்டும், அவசரகால ஒழுங்குகளை இரத்துசெய், அரசியல் மற்றும் சமூக உறுதிப்பாட்டினை உறுதிசெய், அடிப்படை சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதிசெய், சட்டத்தின் ஆட்சியை உறுதிசெய் என்ற சுலோகங்களை ஏந்தி தங்களின் ஆதங்கங் களையும் வெளிப்படுத்தினர்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை மாறவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து காலிமுகத்திடலில் போராடுகின்றவர்கள் மீது அண்மையில் ஏற்படுத்தப்பட்ட தாக்குதலை கண்டித்தும் இந்த தாக்குதலுக்குக் காரணமாக அமைந்திருக்கின்ற அனைத்து சூழலும் மாற்றியமைக்கப்பட வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

இதேவேளை, இப்போராட்டத்தில் கலந்துகொண்டிருந்த விரிவுரையாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்;

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பன இவற்றுக்கு துணை போவதாகக் காணப்படுகின்றது. இவைகளை உடனடியாக இரத்துசெய்ய வேண்டும். மக்கள் தங்களது கருத்துகளை கூறுவதற்கும், கூடுவதற்குமான சுதந்திரத்தினை உறுதிப்படுத்த வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதும் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியிருக்கிறதென்ற நம்பிக்கை பரவலாக காணப்படுகின்றது. இருந்தபோதிலும், ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானதன் பிறகு நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் அச்சத்தையும், கவலையையும் ஏற்படுத்தியிருக்கின்றன.

தற்போது நாட்டில் நிலவும் அரசியல் கலாசாரம் படிப்படியாக மோசமடைந்து செல்கிறது. இதனை மாற்றியமைக்க வேண்டும். இன்று நாம் எதிர்கொண்டுள்ள பொருளாதார மற்றும் சமூக ரீதியான நெருக்கடிகள் குறித்து அனைவரும் சிந்தித்து வருகின்றோம். ஆனால், இவ்வாறான கவனயீர்ப்புப் போராட்டங்கள் மூலமே அரசாங்கத்தின் காதுகளுக்கு கொண்டு செல்ல முடியும். அதற்கான அர்ப்பணிப்பினை வெளிக்காட்டக்கூடிய விதத்திலேயேதான் இந்த கனவயீர்ப்புப் போராட்டம் இடம்பெறுகிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் கலாசாரமும், அரசாங்க முறைமையும் மாற்றம் செய்யப்பட்டு, நிலையான அபிவிருத்தி நோக்கி இந்நாட்டை இட்டுச்செல்லக்கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கும் அவற்றிற்கான பங்களிப்பினை வழங்குவதற்கும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தயாராக இருக்கின்றனர். அதன் ஒரு கட்டமாகவே இந்த கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது - என்றார்.

# முன்னாள் ஜனாதிபதி புகலிடம்பெற வெளிநாட்டமைச்சரின் உதவி தேவையென நினைப்பது சிறுபிள்ளைத்தனமானது

## சுமந்திரன் மனஉளைச்சலில் என்கிறார் முபாறக் அப்துல் மஜீத்

(நூருல் ஹுதா உமர்)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு வெளிநாடுகளில் புகலிடத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலேயே அவரது நெருங்கிய நண்பரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.யூ.அலி சப்ரி, வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளமை முட்டாள் தனமான கருத்தாகும் என்பதுடன், இவர்கள் கள்ளத்தனமாக கல்முனையை காவுகொள்ள ஒப்பந்தம் செய்தமை தோல்வியுற்றதால் ஏற்பட்ட மனஉளைச்சலுமாகும் - என ஐக்கிய காங்கிரஸ் கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமைச்சர் அலி சப்ரி மிகத் திறமையான புத்திஜீவி என்பதை முழுநாடும் அறியும். அவர் நீதி அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் இருந்துள்ளார். முன்னாள் ஜனாதிபதியால்




திறமைசாலி என இனங்காணப்பட்டவர். அதேபோல் இந்நாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அலி சப்ரியின் திறமையை கருத்திற்கொண்டே வெளிநாட்டு விவகாரங் களுக்கான அமைச்சராக நியமித்துள்ளார்.


அது மட்டுமன்றி வெளிவிவகார அமைச்சர் ஒருவரால் முன்னாள் ஜனாதிபதிக்கு புகலிடம் பெற்றுக்கொடுக்க முடியுமென சொல்வதன் மூலம் சுமந்திரனுக்கு சர்வதேச சட்டமும் தெரியாது என நினைக்கத் தோனுகிறது. அப்படி முடியும் என்றிருந்தால் முன்னாள் தமிழீழ போராளிகளின் புகலிடக் கோரிக்கைகளை நமது நாட்டின் முன்னாள் வெளிநாட்டமைச்சர்களால் தடுத்து நிறுத்தியிருக்க முடியுமே. பெற்றுக்கொடுக்க முடியும் என்றால் பெறுவதைத் தடுக்கவும் முடியுமே.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயங்கரவாதியல்ல, நாட்டை சரியாக ஆட்சிசெய்யாத தவறை மட்டுமே செய்தார். நாட்டில் பல கொலைகளை செய்து நாட்டை விட்டு தப்பியோடிய பயங்கரவாதிகள் கூட வெளிநாடுகளில் புகலிடம் பெறும்போது நம் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி புகலிடம் பெற வெளிநாட்டமைச்சரின் உதவி தேவை என நினைப்பது சிறுபிள்ளைத்தனமாகும்.

இப்படியெல்லாம் சுமந்திரன் பேசக் காரணம், கல்முனையை முஸ்லிம், தமிழ் என பிரித்து இனமோதலை உருவாக்க இவர்கள் ஒப்பந்தம் செய்த ஜனாதிபதி வேட்பாளர் தோற்றுப் போய்விட்ட மன உளைச்சலின் விளைவாகும் என்று தெரிவித்துள்ளார்.

# பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கிவைப்பு





(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த 250 பேருக்கு கிழக்கு சமூக அபிவிருத்தி மையம் நேற்று முன்தினம் (26) மட்டு. காந்தி பூங்காவில் வைத்து தலா 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்களை அரசாங்க அதிபர் வழங்கினார்.

கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் தலைவர் எம்.எல்.புஹாரி முகமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன், உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டு மாவட்டத்தில் காணாமல்போனவர்களின் பெண்கள் தலைமைதாங்கும் குடும்பம், விசேட தேவையுள்ளவர்கள், முன்னாள் போராளிகள், பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 250 பேருக்கு முதற்கட்டமாக இந்த உலருணவுப் பொதிகளை வழங்கினர்.

# மருதமுனையில் முன்பள்ளி மாணவர்களின் நிறங்களின் தினம்







(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை ஹவுஸ் ஒவ் இங்கிலிஸ் முன்பள்ளி மாணவர்களின் திறமைக்கு வழிகாட்டும் நோக்கிலான நிறங்களின் தினமும் பெருநாள் ஒன்றுகூடலும் மருதமுனை கலாசார மண்டபத்தில் பாடசாலையின் பணிப்பாளர் சுமைய்யா ஜெஸ்மி தலைமையில் நடைபெற்றது.

கனடா பல்கலைக்கழக வருகைதரு விரிவுரையாளரும் பொறியியலாளருமான ஹுமைட் றசூல் நிகழ்வின் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதுடன், இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜெஸ்மி மூஸா உட்பட பலரும் அதிதியாக கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

# அனர்த்த நிவாரணக் கொடுப்பனவு மாவடிப்பள்ளியில் வழங்கிவைப்பு





(மாவடிப்பள்ளி நிருபர்)

மாவடிப்பள்ளி, காரைதீவு ஆகிய பிரதேசங்களில் அண்மையில் ஏற்பட்ட மின்னல் தாக்கம் மற்றும் சூறாவளி போன்றவற்றினால் வீட்டு உபகரணங்கள் பாதிப்புக்குள்ளான மற்றும் யானைகளினால் சேதமாக்கப்பட்ட வீட்டு உரிமையாளர்களுக்கான முதலாம் மற்றும் இரண்டாம் கட்ட கொடுப்பனவுக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலாளர் எஸ்.ஜெகராஜன் தலைமையில் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் மின்னல் தாக்கத்தினால் வீட்டு உபகரணப்பொருட்கள் பாதிப்படைந்த காரைதீவு-01 மற்றும் 12ஆம் பிரிவுகளைச் சேர்ந்த 05 பயனாளிகளுக்கான முதலாம் கட்ட கொடுப்பனவுக்கான 50,000 ரூபாவுக்கான காசோலைகளும் மாவடிப்பள்ளி கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றினால் வீடு பாதிப்படைந்த 04 பயனாளிகளுக்கான கொடுப்பனவான 40,000 ரூபாவுக்கான காசோலைகளும் மற்றும் 2020, 2021 ஆகிய வருடங்களில் மாளிகைக்காடு மேற்கு காரைதீவு-07 மற்றும் 10 ஆகிய பிரிவுகளில் யானைத்தாக்கம் காரணமாக சொத்தழிவுகளுக்குள்ளான 05 பயனாளிகளுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவான 1,57,000 ரூபாவுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



அழைப்பை பாத்துக்கொண்டு இருக்காராம் மனோ கணேசன் எம் பி. ரணில் கூப்பிட்டா அமைச்சர் பதவியும் எடுப்பாராம். ஆரு கூப்பிட்டாலும் அமைச்சர் பதவி எடுக்கிற ராசி மனோ கணேசனுக்கும், ரவூப் ஹக்கீமுக்கும் ஒரு ராசிதான் போல. புறகு என்ன செய்யிற சம்மந்தருர சுமந்திரண்ட கதய கேட்டா எந்த சலுகையும் கிடையாது எண்டது மனோ கணேசனுக்கு நல்லா தெரியும் எலுவா.


# மட்டு. மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் ஆடி அமாவாசை திருவிழா இறுவட்டு வெளியீடு!





(மண்முனை நிருபர்)

மட்டக்களப்பு, அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ்வரப் பெருமான் மேல் பாடப்பட்ட "ஆடி அமாவாசை திருவிழா" இறுவட்டு வெளியீடு நேற்று முன்தினம் (26) இடம்பெற்றது.



கிழக்கிலங்கையின் வரலாற்றுச்சிறப்புமிக்கமூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற மட்டக்களப்பு, அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர்மீது மட்டக்களப்பு அமிர்தகழியைப் பிறப்பிடமாகக்கொண்ட உணர்ச்சி கவிஞர் காசி ஆனந்தனின் பாடல் வரிகளுக்கு தமிழிசை வேங்கை ரீ.எல்.மகராஜன் இசையமைத்துப் பாடப்பட்ட ஆடி அமாவாசை திருவிழா இறுவட்டு வெளியீட்டு நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கலந்துகொண்டு இறுவட்டினை வெளியிட்டு வைத்துள்ளார்.

அமிர்தகழி, ஸ்ரீ மாமாங்கேஸ் வரப் பிள்ளையார் ஆலய வண்ணக்கர் தி.விக்கிரமன் தலைமையில் இடம்பெற்ற இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு மங்கள விளக்கேற்றலுடன், ஆரம்பமாகியதனைத் தொடர்ந்து, ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய பிரதமகுரு ஆதி சௌந்தராஜ குருக்களின் ஆசியுரையுடன் குறித்த இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வெளியீட்டு நிகழ்வில் ஸ்ரீ மாமாங் கேஸ்வரர் ஆலய பரிபாலன சபையினர், முன்னால் வண்ணக்கர்கள், அண்மித்த கிராமங்களின் ஆலய பரிபாலன சபையினர், மட்டக்களப்பு தமிழ்ச் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# ரஷ்யப் படையினர் 40,000 பேர் எமது தாக்குதலில் உயிரிழப்பு

## உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி அறிவிப்பு



ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான போர் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில், 40 ஆயிரம் ரஷ்யப் படை வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் ஸெலென்ஸ்கி அறிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான போர் 150 நாட்களுக்கு மேலாக இடம்பெற்று வருகிறது. உக்ரைனின் பல்வேறு நகரங்களை ரஷ்யப் படையினர் தாக்கி அழித்துள்ளார்கள். இந்நிலையில், மேற்குலக நாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொண்ட உக்ரைன் சமீப காலமாக பதில் தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.

அதன் முக்கிய அங்கமாக, ரஷ்யாவின் 50 ஆயுதக் கிடங்குகள் மீது உக்ரைன் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனை ரஷ்ய அரசு மறுத்திருந்தாலும் கூட குறித்த தாக்குதல் அதிக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, ரஷ்யா தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது.


இருதரப்பு ஒப்பந்தங்களை மீறி ரஷ்யா தாக்குதல்களை முன்னெடுப்பதாக உக்ரைன் பாதுகாப்பு தரப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இந்நிலையிலேயே ரஷ்யப் படையினர் 40ஆயிரம் பேர் உக்ரைன் படையினரால் கொல்லப்பட்டுள்ளதாக ஸெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.





கனடாவுக்கு விஜயம் செய்துள்ள பாப்பரசர் அங்கு பழங்குடியினரை சந்திக்கச் சென்றதுடன் மறைந்த பழங்குடித் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்.



ரஷ்யப் படைகளின் தாக்குதலினால் கால்கள், இடது கை மற்றும் வலது கையின் நான்கு விரல்களை இழந்துள்ள 19 வயதுடைய உக்ரைன் இளைஞர் மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.

# உலக செய்திகள்

## அடுத்த பீச் விசிட் எங்கே?



அமெரிக்காவின் சிறந்த பாடகியாகவும் நடிகையாகவும் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ள வனேசா ஹட்ஜன்ஸை அவரது ரசிகர்கள் அன்புக் கேள்விகேட்டு தொந்தரவு செய்துவருகிறார்கள்.

அதாவது, அவர் சமீப காலமாக வாரந்தோறும் பிரபலமான கடற்கரைகளுக்கு சென்றுவருகிறார். அவ்வாறு சென்று திரும்பிய பின்னர் வெளியிடப்படும் புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாகின்றன. ஊடகங்கள் கூட குறிப்பிட்டுப் பேசுகின்றன.

இந்நிலையில், மெக்சிகோ கடற்கரையில் கடந்த வாரம் சென்றபோது சிவப்பு நீச்சல் உடையில் கவர்ச்சியாக காட்சியளித்த புகைப்படங்கள் வெளியாகின. அவற்றைப் பார்த்தவுடன் ஆச்சரியடைந்த அவரது ரசிகர்கள் அடுத்த பீச் விசிட் எங்கே? என கேள்வியெழுப்பி வருகின்றனர்.

வனேசா ஹட்ஜன்ஸுக்கு 47 மில்லியன் நேயர்கள் இன்ஸ்டகிராம் பக்கத்தில் இருக்கிறார்கள்.

அண்மைக்காலமாக பேசப்படும் நட்சத்திரங்கள் வரிசையில் இவர் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காலை உணவை யாரும் தவற விடாதீர்கள்

### மாணவர்கள் மத்தியில் முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



நன்றாக சாப்பிடுங்கள், காலை உணவை தவறவிடாதீர்கள், நன்றாக உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள், நன்றாக படியுங்கள் என மாணவர்களுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுரை வழங்கியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கான மனநலம், உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வு தொடக்க விழாவில் உரையாற்றினார்.

அப்போது பேசிய அவர், எத்தனையோ நிகழ்ச்சிகளுக்குச் சென்றாலும் பள்ளிக் கூடங்களுக்குச் செல்வதைப் போன்ற உற்சாகம் வேறு நிகழ்ச்சிகளில் நிச்சயமாக அமைவதில்லை.

நான் நீண்ட நேரம் உங்களிடத்திலே உரையாற்ற முடியாத சூழ்நிலையில் நின்று கொண்டிருக்கிறேன். நான் பேசுகின்ற பேச்சிலேயே உங்களுக்குத் தெரியும், தொண்டை எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்று. தொண்டை பாதிக்கப்பட்டிருந்தாலும் தொண்டில் பாதிப்பு இருக்கக்கூடாது என்பதற்காகத் தான் நான் என்னுடைய பணியை நிறைவேற்ற முன்வந்திருக்கிறேன், தவிர வேறு அல்ல.

குழந்தையின் புன்சிரிப்பு தரும் புத்துணர்ச்சியும் பிள்ளைச் செல்வங்களின் பேச்சு தரும் உற்சாகமும் மருந்து மாத்திரைகளை விட வலிமையானவை என்றார்.



பிரான்ஸின் வடக்கு நகரமான குபுல்கோவில் பழங்குடியின மக்களின் வருடாந்த திருவிழாவில் பாரம்பரிய நடனங்கள் இடம்பெற்றன.



ஸ்பெயினில் கட்டுப்படுத்த முடியாமல் பரவும் காட்டுத் தீயை அணைக்கப் போராடும் படையினர்.

## மத்திய பசுபிக் கடலில் புதிய வகை உயிரினம்



மத்திய பசுபிக் கடலில் வாழும் புதிய வகை உயிரினம் ஒன்றை கடல்சார் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த உயிரினம் சுமார் 5ஆயிரத்து 500 அடி ஆழத்தில் வாழ்வதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த நெச்சுரல் ஹிஸ்டோரி மியூசியம் என்ற நூதனசாலையைச் சேர்ந்த ஆய்வாளர்களே இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர். இந்த உயிரினம் குறித்து மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவற்றின் ஆயுட்காலம், உணவு உண்ணும் தன்மை, இனப்பெருக்கம் குறித்து முழுமையாக ஆய்வுசெய்த பின்னர் மேலும் பல புதிய தகவல்கள் கிடைக்கப்பெறும் எனவும் ஆய்வாளர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்

### நால்வர் உயிரிழப்பு; 60 பேருக்கு காயம்





பிலிப்பைன்ஸில் நேற்று புதன்கிழமை ஏற்பட்ட நில நடுக்கத்தில் நால்வர் பலியாகியுள்ளதுடன் 60இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 07ஆக பதிவாகியுள்ளதாகவும் பிலிப்பைன்ஸின் வடக்கு பகுதியை அதிகமாக பாதித்துள்ளதாகவும் அந்நாட்டு உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்கள் செறிந்து வாழும் அப்ரா மாகாணத்தை இந்த நிலநடுக்கம் தாக்கியுள்ளது. குடியிருப்புப் பகுதிகள், வர்த்தக நிலையங்கள் என முக்கியமான கட்டடங்கள் சேதத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த நிலநடுக்கம் காரணமாக பலர் மாயமாகியிருப்பதாகவும் மீட்புப் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப் பட்டுள்ளதாகவும் அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## சமையலறை வன்முறையை தடுக்க நூதனப் போராட்டம்

சமையல் அறையில் பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறையைத் தடுக்கும் முகமாகவும் அவ்வாறு பாதிக்கப்படுவோருக்கு உதவும் அமைப்பு ஒன்றுக்கு நிதி சேகரிக்கும் முகமாகவும் இங்கிலாந்தில் பெண்கள் சிலர் நூதனப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

அந்நாட்டின் மிக உயரமான மலையாகக் கருதப்படும் ஸ்கெபல் பைக் மலையின் மீது, சமையலறை உபகரணங்களுடன் அவர்கள் ஏறியுள்ளனர்.

இதன்மூலம் பெண்கள் படும் அவஸ்தைகளை வெளியுலகுக்கு உணர்த்தக் கூடியதாக இருக்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வீட்டு வன்முறைகளில் பாதிக்கப்படும் பெண்களுக்குரிய அமைப்பான 'ஜஸ்ட் கிவிங்' என்ற தொண்டு நிறுவனத்துக்கு இவர்கள் மலையேறிய தினம் பெருந்தொகை பணத்தையும் சேகரித்துக்கொடுத்துள்ளார்கள்.





# அட்சரத்தில் எழுந்தருள்புரியும் கதிர்காம முருகன்

(கலாபூஷணம் இ.சியாமளாதேவி வடிவேலன்)

இலங்கையில் காணப்பெறும் முருகன் ஆலயங்களுள் மிகப்பழைய வரலாறுடையது கதிர்காமம் என்பது குறிப்பிடத்தக்கது.

சிதம்பரத்தில் இந்தப் பிரபஞ்சமே இயங்கும் வண்ணம் ஆடல் புரியும் கூத்தபிரானான ஆடல் வல்லான் அருளிய மயிலேறிய மாணிக்கமே முருகன். பரமசிவத்தின் புருவமத்தியில் அழற்கண்ணினின்றுஞ் சோதியாக தோன்றி நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஐம்பூதப்பொருளுறவுகொண்டு சரவணப்பொய்கையிற் தாமரை மலர் மேல் ஆறுமுகமும், பன்னிரு கைகளும் கொண்டு முருகனாகத் திருவவதாரம் செய்தார்.



சிவபெருமானே ஆறுமுகக் கடவுளாக அவதாரம் செய்தார். முருகை உடையவர் முருகன், முருகு என்ற சொல் இளமை, அழகு, எழில், ஞானமனம், தெய்வத்தன்மை என்னும் கருத்துகளை சிறப்பாக உணர்த்தும். முருகனை தமிழ்க்கடவுள் என்று அடியார் சிறப்பித்து மகிழ்வர். இதற்கு தமிழ் கூறும் நல்லுலகம் போற்றும் முதல் நூலாம் "தொல்காப்பியமே" சான்றாகும்.

தமிழில் உயிரெழுத்துகள் பன்னிரெண்டும் முருகனின் பன்னிரெண்டு கரங்களாகும். முருகு என்ற சொல்லில் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூவகை எழுத்துகளும் இடம்பெறுகின்றன.

சூரபத்மனை அழிக்க வந்த முருகன் கதிர்காமத்தில் பாசறை அமைத்துத் தங்கியிருந்தார் என்றும் அங்கேயே வள்ளியைத் திருமணம் செய்தார் என்றும் அப்பிரதேசத்து ஐதீகங்கள் கூறுகின்றன. முருகன், வள்ளி என்ற மணப்பெண்ணை கொண்ட குலம் வேடர்குலம். கதிர்காமத்தில் வேடர் பரம்பரையினர் பூசகராகவும், பராமரிப் பாளராகவும் உரிமை கொண்டாடி நிற்பதை காணக்கூடியதாக உள்ளது.

கதிர்காமத்தின் எளிமையான அமைப்பும், வழிபாட்டு முறைகளும் அத்தலத்தின் தொன்மைக்குச் சான்றுபகர்வன எனலாம். விக்கிரகமின்றி, பிராமணரின்றி, மந்திரமின்றி நூற்றாண்டுகளாக பக்தர்களைக் கவர்ந்திடும் பழைமைமிக்கது கதிர்காமம். வேடுவ குலத்தினரைச் சேர்ந்த "கப்புறாளை" எனப்படும் பூசகர் வாய்க்கட்டி நின்று மௌனபூசை செய்தல் கதிர்காமத்துக் கிரியை முறை. ஆகமச் சார்பற்ற பூசை முறை அங்கு தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றது. நாகரிக வளர்ச்சிப்படியில் நிற்போரின் நைவேத்தியப் பொருட்கள் போலன்றி தேனையும், தினை மாவையும் தம் குலத்தின் பெயர் கொண்டவனுக்கு மனமுவந்து நைவேத்திய மாக அவர்கள் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.




பிரதான கோயிலின் மூலஸ்தானம் திரைச்சீலையில் எப்பொழுதும் மறைந்திருக்கும். கண்களுக்குத் தெரிவது திரைச்சீலை யிலுள்ள வள்ளி - தெய்வானை சமேத முருகப்பெருமானின் அழகிய தோற்றமாகும். மூலஸ்தானத்தில் மூர்த்தியாக விக்கிரகம் இல்லை. அங்கு பெட்டகமொன்றில் யந்திரம் எழுதப்பட்ட தகடு அட்சரம் ஒன்று இருக்கின்றது. அப்பெட்டகமே ஆடி மாதத்தில் நடைபெறும் திருவிழாவில் அலங்கரித்த யானை மீது வைத்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படுகின்றது.

தொன்மைமிக்க கதிர்காமத்தின் மறுமலர்ச்சி கல்யாணகிரி சுவாமிகளுடன் ஆரம்பித்ததாகக் கூறுவர். கதிர்காமத்தில் நீண்டகாலம் முருகப்பெருமான் வள்ளி நாச்சியாருடன் தங்கிவிட்டதால் அவரை மீண்டும் அழைத்துச் செல்ல வந்த கல்யாணகிரி சுவாமிகள், தாம் வந்த வேலையை மறந்துவிட்டு கோவில் திருப்பணிகளில் ஈடுபட்டு, அங்கேயே சமாதியடைந்தார். அவர் முத்துலிங்கமாக சமாதியடைந்ததால் "முத்துலிங்க சுவாமிகள்" என்று அழைக்கப்பெற்றார் என முத்துலிங்க சுவாமியைப் பற்றி "வையா பாடல்" குறிப்பிடுகின்றது. முத்துலிங்கசுவாமி எழுதிய அட்சரமே பேழையினுள் உள்ளது என பெரும்பாலான நூல்கள் கூறுகின்றன.

முருகன் பல திருவிளையாடல்களை புரிந்துள்ளார். திருத்தணிகையில் தெய்வானையை மணந்த முருகன் வள்ளியின் மீது கொண்ட காதலால் வள்ளியை கரம்பிடித்தார். வேடனாகி, வேங்கை மரமாகி காட்சியளித்து கதிர்காமத்தில் இன்றும் அருள்புரிகின்றார்.

முருகனுக்குரிய படை வீடு ஆறு. திருப்போரூரிலிருந்து முருகன் படையுடன் புறப்பட்டு, திருச்செந்தூரில் தங்கி, சமுத்திரத்தின் நடுவில் மாமரமாய் நின்ற சூரபத்மனை கதிர்காமத்திற்கருகே வேலால் இருகூராக்கினார்.

பின்னர் அவனை ஆட்கொண்டு வேலும், மயிலுமாக தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டார்.

முருகன் செவ்வாய்க்கிரகத்துக்குரியவர். செந்நிறமானவர். வண்ணமயிலில் உலா வருபவர். இச்சாசக்தியாகிய வள்ளி நாயகியையும், கிரியா சக்தியாகிய தேவ யானையையும், ஞான சக்தியாகிய வேலையும் தாங்கி நிற்கும் தோற்றம் கொண்டவர். மயிலை வாகனமாகக்கொண்ட சேவற்கொடியோன் ஆவார்.

முருகப்பெருமானே! முத்தமிழ் வித்தகனே!

மாயத்திரை விலக்கும் மயிலேறும் இராவுத்தனே!

கல்லுக்குள் ஈரத்தைக்கசியவைக்கும் கந்தவேளே!

ஆயிரம் தெய்வங்கள் உண்டு. ஆனால் நீதான் தமிழ்த்தெய்வம்!

***"முடியா முதலே முருகா சரணம்***
***என அவன் தாழ் பணிவோம்"***

சுபகிருது வருடம் ஆடி மாதத்தில் மகோற்சவம் காணும் கதிர்காம முருகனின் அருள் அனைவருக்கும் கிட்டுவதாக!



# ஆடி அமாவாசை

ஒரு மனிதன் தன் வாழ்வில் ஐந்து பேரைக் காக்க வேண்டும் என்று வள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ளார்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"

தென்புலத்தார், தெய்வம், விருந்தினன், உறவினர்கள் மற்றும் தன் குடும்பம் ஆகிய ஐவரையும் காக்கவேண்டிய கடமை ஒரு மனிதனைச் சேர்கிறது. இந்த ஐவரில் முதலாவதாக திருவள்ளுவர் குறிப்பிடுவது தென்புலத்தார் எனப்படும் பித்ருக்களையே.

அமாவாசை என்பது மிகவும் சிறந்த நாள். அமாவாசை என்பது முழுமை பெற்ற நாள். எனவே, நல்ல காரியங்கள் எல்லாவற்றையும் எள்ளும் தண்ணீரும் கொடுத்த பிறகே செய்யலாம் என்று கூறுவார்கள். நம் முன்னோர்களுக்கு இன்றைய தினம் எள்ளும் தண்ணீரும் கொடுத்து தர்ப்பணம் செய்யவேண்டும். எள்ளும் தண்ணீரும் பித்ருக்களுக்கு மிகவும் பிடித்தமானது.

ஒவ்வொரு மாதமும் ஒரு அமாவாசை வந்தாலும், மூன்று முக்கிய அமாவாசை தினங்களில் முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து வழிபடுவது அவசியம். ஆடி அமாவாசை தினத்தில் பித்ருக்களாக இருக்கும் நம் முன்னோர்கள், பிதுர் லோகத்திலிருந்து பூலோகத்திற்குப் புறப்படுவதாகக் கருதப் படுகிறது.

ஆடி அமாவாசை திதி இவ்வருடம் ஜூலை 28ஆம் திகதி (இன்று) கடைப்பிடிக்கப் படுகிறது. ஆடி அமாவாசை தினத்தில் பித்ருக்களுக்கு தர்ப்பணம், சிரார்த்தம் கொடுக்கலாம்.

ஆடி அமாவாசை தினத்தில் பித்ருக்கள் பூலோகத்திற்குப் புறப்படுவதாகக் கருதப் படுகிறது. ஒவ்வொரு மாதமும் ஒரு அமாவாசை வருவது வழக்கமானது. அமாவாசை திதியில் நம் முன்னோர்களை நினைத்து விரதமிருந்து வழிபடுவதும், தர்ப்பணம் கொடுப்பதால் முன்னோர்களின் ஆசி கிடைக்கும்.

***அமாவாசை விரதம்:***

**அமாவாசை விரதம் யார் இருக்க வேண்டும்?**

தாய், தந்தை இல்லாத ஆண்களும் கணவர் இல்லாத பெண்களும் இந்த விரதத்தை மேற்கொள்ள வேண்டும். இவர்கள் கண்டிப்பாக விரதமிருந்து முன்னோர்களுக்கும், இறந்த சொந்தங்களுக்கும் தர்ப்பணம் கொடுத்து வழிபடுவதால், குடும்ப விருத்தி, குடும்பத்தில் மகிழ்ச்சி, கீர்த்தி ஏற்படும்.

***மூன்று அமாவாசை தினங்கள்:***

ஆடி அமாவாசை :

மகாளய அமாவாசை :

புரட்டாசி அமாவாசை

மகாளய அமாவாசை தொடக்கத்தின்போது பிதுர்கள் பூலோகத்தை வந்து அடைவதாகவும், தன் சந்ததியினரை ஆசி வழங்குவதாகவும் கூறப்படுகிறது. மகாளயபட்ச எனும் 15 நாட்களில் ஏதேனும் ஒரு நாளிலாவது அமாவாசை விரதம் இருந்து, முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க வேண்டும்.

***தை அமாவாசை :***

தை அமாவாசை தினத்தில் பித்ருக்கள், பூலோகத்திலிருந்து மீண்டும் பிதுர் லோகத்திற்கு திரும்பிச் செல்வதாக நம்பப்படுகிறது.

***ஆடி அமாவாசை 2022 தர்ப்பணம் கொடுக்க சரியான நேரம் :***

ஆடி மாதத்தில் அமாவாசை திதி ஜூலை 27ஆம் திகதி இரவு 10.06 மணிக்கு தொடங்குகிறது. அதனால் ஆடி அமாவாசை தர்ப்பணம் ஜூலை 28ஆம் திகதி வியாழக்கிழமை காலைமுதல் பிற்பகல் வரை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நாம் முன்னோர்களுக்கு தர்ப்பணம், சிரார்த்தம் கொடுக்க சரியான நேரமாக பார்க்கப்படுகிறது.

***முன்னோர்கள் மகிழ்ச்சி***

அமாவாசை தினத்தில் முன்னோர்களையும் தாய், தந்தையர்களையும் யார் வழிபடுகிறார்களோ, அவர்களின் பிள்ளைகளுக்கும் தலைமுறைக்கும் முன்னோர்களின் ஆசி கிடைக்கும். அமாவாசை நாளில்தான் சந்திரன் சந்தோஷம் அடைகிறாராம். மனோகாரகன் சந்திரன் சந்தோஷமடைந்தால் நம்முடைய மனதும் சந்தோஷம் அடையும். மகிழ்ச்சியான மனதுடன் நாம் செய்யும் செயல்கள் எல்லாமே நிச்சயம் வெற்றிபெறும். சந்திரன் மகிழ்ச்சியுடன் இருக்கும் இந்த நாளில் நாம் செய்யும் தர்ப்பணங்கள் நம் பித்ருக்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும் என்பதற்காகவே அமாவாசை தினம் பித்ரு தர்ப்பணத்துக்கு உரிய நாளாக கூறியிருக்கிறார்கள்.

***அன்னதானம் முக்கியம்***

நோய் தொல்லையால் அவதிப்படுபவர்கள் அமாவாசை நாளில் வெண்கலக் கிண்ணத்தில் சுத்தமான நெய் தானம் செய்ய வேண்டும். அப்படி செய்தால் சகலவித நோய்களும் நீங்கும் என்பது ஐதீகம். முன்னோர்களுக்கு படையலிட்டு வழிபட்ட பின்னர் ஏழைகளுக்கும் இயலாதவர்களுக்கும் அன்னதானம் கொடுப்பது சிறப்பு. அமாவாசை நாளில் உணவின்றி தவிப்பவர்கள், ஏழைகள், பசியோடு இருப்பவர்களைத் தேடிச்சென்று தானம் கொடுங்கள். நம்முடைய வழிபாடும், தானமும் உள்ளன்போடு இருந்தால் முன்னோர்களின் ஆசி பரிபூரணமாகக் கிடைக்கும்.


***பித்ருசாப நிவர்த்தி***

அமாவாசை நாளில் ஆடை தானம் செய்வதால் வாழ்வில் வேண்டிய பலன் உண்டாகும். புதிய ஆடைகளை தானம் செய்வதால் ஆயுள்விருத்தி, குழந்தைகள் சிறு வயதில் இறந்துவிடுவது தடுக்கப்படும். கண்டாதி தோஷம் விலகும். உங்கள் பணியில் வரும் தடைகள் அனைத்தும் நீங்கும். பசு தானம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பித்ருசாப தோஷங்கள் விலகும். எந்தவொரு சுப திதியிலும் பசுவை தானம் செய்வதால் பித்ருக்களின் ஆசீர்வாதம் பரிபூரணமாக கிடைக்கும். ஈரேழு ஜென்மத்தில் செய்த பாவங்களும் நீங்கும் என்பது நம்பிக்கை.

***எள் தானம்***

எள் என்பதை வடமொழியில் திலம் என்று கூறுவார்கள். திலம் என்றால் விஷ்ணோர் அம்ச சமுத்பவ என்று பொருள். விஷ்ணுவிலிருந்து விஷ்ணு பகவானின் அம்சமாக தோன்றியது எள். திலம் என்று சொல்லப்படும் எள்ளை தானமாகக் கொடுத்தாலே சகல பாவங்களும் நீங்கிவிடும் என்பது நம்பிக்கை.

# வெள்ளவத்தை கடற்பரப்பில் பிதிர்கடன் செலுத்த விசேட ஏற்பாடுகள்



ஆடி அமாவாசையை முன்னிட்டு கொவிட் - 19 வழிகாட்டல்களை பின்பற்றி வெள்ளவத்தை புகையிரத நிலையத்திற்கு அண்மையிலுள்ள கடற்பரப்பில் பிதிர்கடன் செலுத்தும் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்துள்ளதாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்தத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இந்து சமயத்தின் முக்கிய விரதங்களுள் ஒன்றான ஆடி அமாவாசை விரதம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. நீர் நிலைகளில் குறிப்பாக, கடற்கரைகளிலேயே இவ்விரதத்திற்கான தர்ப்பண வழிபாட்டு முறைகளை நிறைவேற்றுவது வழக்கம்.

அந்தவகையில் கொழும்புவாழ் மக்கள் கடந்த பல வருடங்களாக கொழும்பு - 06, வெள்ளவத்தையில் அமைந்துள்ள புகையிரத நிலையத்திற்கு அண்மையில் (மியாமிக்கு எதிர்ப்புறம்) உள்ள கடல் சங்கமத்திலேயே குறித்த வழிபாடுகளை நிகழ்த்தி வந்துள்ளனர்.

இவ்வருடமும் அதேபோல் கொவிட் - 19 பரவுதலை தடுக்கும் நோக்கோடு சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றி கொழும்பு - 06, வெள்ளவத்தையில் அமைந்துள்ள புகையிரத நிலையத்திற்கு அண்மையில் உள்ள கடற்பரப்பில் (மியாமிக்கு எதிர்ப்புறம்) காலை 6.30 மணிமுதல் பிதிர்கடன் செலுத்துவதற்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் இந்துப் பண்பாட்டு நிதியத்தினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



**கொழும்பு அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்பன் கோயில் கொடியேற்றும் நிகழ்ச்சி நேற்று முன்தினம் (26) மாலை 5.30 மணியளவில் நடைபெற்றது.** **(படங்கள் : மணவை அசோகன்)**

# இலங்கையிலேயே நடைபெறவுள்ள ஆசியக்கிண்ணத் தொடர்: தோள் கொடுத்த இலங்கை அரசு; இன்று முக்கிய சந்திப்பு

இலங்கையில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடரை இலங்கையிலிருந்து ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு மாற்ற அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்றுள்ள நிலையில், தொடரை இலங்கையிலேயே நடத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று ஆசிய கிரிக்கெட் பேரவையின் அதிகாரிகளுக்கும், இலங்கை கிரிக்கெட் நிறுவன அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

இலங்கைக்கு ஆசிய கிரிக்கெட் பேரவை ஏற்கனவே தொடரை நடத்தும் உரிமையை வழங்கியுள்ளதாகவும், ஆனால், தற்போது நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக அதற்கான நடவடிக்கைகள் இன்னும் நிறைவடையவில்லை எனவும் இலங்கை கிரிக்கெட் நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் கிரிக்கெட் சபையுடன் கலந்துரையாடி, இலங்கையில் போட்டிகளை நடத்துவதற்கு பச்சைக்கொடி காட்டியுள்ளது.

போட்டிகள் ஓகஸ்ட் 24 முதல் செப்டெம்பர் 10 வரை நடைபெறும். அனைத்து போட்டிகளும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதுடன், போட்டியை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவையான ஆதரவை வழங்குவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்துள்ளது.




## 22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழா இன்று பேர்மிங்ஹாமில் ஆரம்பம்

# இலங்கையிலிருந்து 110 வீர, வீராங்கனைகள்

### 14 வகையான போட்டிகளில் பங்கேற்பு






(ஏ. அகீல் சிஹாப்)

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பொதுநலவாய விளையாட்டு விழாவின் 22ஆவது தொடரின் ஆரம்ப விழா இன்று இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் அலெக்சாண்டர் அரங்கில் ஆரம்பமாகிறது.

பொதுநலவாய அமைப்பின் உறுப்புநாடுகளும் அதனைச் சார்ந்த பிராந்தியங்களுக்கும் இடையே நடைபெறும் விளையாட்டுப் போட்டியே பொதுநலவாய விளையாட்டுப் போட்டி என அழைக்கப்படுகிறது. 2022ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழாவில் 72 நாடுகள் கலந்து கொள்கின்றன. இதில் தட களம், பேட்மின்டன், ஹொக்கி, குத்துச்சண்டை, பளு தூக்குதல், கிரிக்கெட் உள்ளிட்ட 19 போட்டிகளும், 8 பாரா விளையாட்டுகளும் இடம்பெறுகின்றன. சுமார் 6,500 வீரர்கள் மற்றும் குழு நிர்வாகிகள் இந்தப் போட்டியில் கலந்துகொள்வர்.

பொதுநலவாய விளையாட்டு விழாவில் முதன்முறையாக மகளிர் கிரிக்கெட் இடம்பெறவுள்ளது. இதில் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியும் பங்கேற்கின்றமை விசேட அம்சமாகும். இன்றுமுதல் எதிர்வரும் ஓகஸ்ட் 8ஆம் திகதிவரை போட்டிகள் நடைபெறவுள்ளன.

22ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பாக ஒரு மாற்றுத்திறனாளி உட்பட 110 வீர, வீராங்கனைகள் 14 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர். இன்றைய ஆரம்ப விழாவில் இலங்கையின் தேசிய கொடியை பளுதூக்கல் வீரர் இந்திக்க திசாநாயக்க ஏந்திச்செல்கிறார். இலங்கை விளையாட்டு வீரர்கள் குழாத்தின் தலைவராக நியமிக்கப்பட் டுள்ள அவர், கோல்ட் கோஸ்ட் 2018 பொதுநல வாய விளையாட்டு விழாவில் பளுதூக்கலில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## ஒருநாள் சர்வதேச போட்டிகளை 40 ஓவர்களாக்கலாம்

### சாஸ்திரி ஆலோசனை



அணிக்கு 50 ஓவர்களாக நடைபெற்றுவரும் ஒருநாள் சர்வதேச போட்டிகளை 40 ஓவர்களாக குறைக்கலாம் என இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ரவி சாஸ்திரி கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், ஒருநாள் கிரிக்கெட்டை 40 ஓவர்களாக மாற்றுவதால் எந்த பாதிப்பும் ஏற்படாது. ஒருநாள் கிரிக்கெட்டின் பயணம் 60 ஓவர்களாக தொடங்கியது. 1983இல் இந்தியா உலகக்கிண்ணத்தை வென்றபோது விளையாடிய ஓவர்களின் எண்ணிக்கை 60 ஆக இருந்தது. அப்போது 20 முதல் 40 வரையிலான ஓவர்கள் மிகவும் சோதிக்கக்கூடியவையாக இருந்தன. அதனால் ஓவர்களின் எண்ணிக்கை 50 ஆகக் குறைக்கப்பட்டது.

அந்த மாற்றம் நிகழ்ந்து நீண்டகாலமாகிவிட்டது. அதனால் பழைய பாணியில் 50 ஓவர்களை 40 ஓவர்கள் எனக் குறைக்கலாம். நாம் முன்னோக்கி சிந்திப்பது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

## 2022 T20 உலகக்கிண்ணத்தை ஆஸி. அணி வெல்லும்

### பொண்டிங் கணிப்பு



ஒக்டோபர் - நவம்பர் காலப்பகுதியில் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணத் தொடரின் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணி இந்தியாவை வெல்லும் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், கடைசி ரி20 உலகக்கிண்ணத்தை (2021) வென்ற அவுஸ்திரேலியாவிற்கு அதே நாட்டில் இம்முறை நடப்பதால் சாதகமான சூழ்நிலை நிலவும். ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஆடுகளம் பற்றி எனக்குத் தெரியும். கடினமான அந்த ஆடுகளத்திலும் அவுஸ்திரேலிய அணி சிறப்பாக விளையாடியது. தற்போது இங்கிலாந்து அணி வெள்ளைப் பந்து போட்டிகளில் சிறப்பாக விளையாடி வருகிறது. எனக்கு தெரிந்து 3 அணிகளுக்கு பெரிய அளவிலான போட்டி இருக்கும்.

இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய அணிகளின் போட்டி கடுமையானதாக இருக்கும். ஏனெனில், அதிகமான ஆட்ட நாயகர்கள் இந்த அணிகளில்தான் இருக்கிறார்கள். நியூசிலாந்து, பாகிஸ்தான் அல்லது மே.இ. தீவுகள் அணிகள் கூட நன்றாக விளையாடுகின்றன. அவர்களுக்கு ரி20 சாதகமான களம். இருப்பினும் அவர்கள் ஆட்டத்தை எப்படி ஆடுவார்கள் என்பதைப் பொறுத்தே இந்த உலகக்கிண்ண முடிவுகள் இருக்கும். என்னைப் பொறுத்தவரை இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் இறுதிப்போட்டிக்கு தெரிவாகும். அதில் ஆரோன் பின்ச் தலைமையிலான ஆஸி. அணி, இந்தியாவை வென்று கிண்ணத்தை வெல்லுமென நினைக்கிறேன்.

# ஓட்டமாவடி ஓ.எல்.எவ். கோல்ட் கிண்ணத்தை சுவீகரித்த வாழைச்சேனை நியூ ஸ்டார்





(மீராவோடை நிருபர்)

ஓட்டமாவடி உதைபந்தாட்ட சம்மேளனம் (ஓ.எல்.எவ்.) நடத்திய கோல்ட் கப் சுற்றுத் தொடரை வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சுவீகரித்துள்ளது.

10 அணிகள் பங்குபற்றிய உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் ஓட்டமாவடி அமீர் அலி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் வாழைச்சேனை நியூ ஸ்டார் மற்றும் வாழைச்சேனை அல்-அக்ஸா ஆகிய அணிகள் மோதின. இதில், 5 - 0 என்ற கோல் கணக்கில் வாழைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழகம் அபார வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

ஓட்டமாவடி உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் எஸ்.எம்.தௌபீக் தலைமையில் நடைபெற்ற கிண்ணம் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜஸ்வர் உமர் கலந்து கொண்டதுடன், ஏனைய அதிதிகளாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எம்.நௌபர் மற்றும் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# இலங்கை கூடைப்பந்து அணியில் யாழ். வீரர்




பொதுநலவாய விளையாட்டு விழாவில் கூடைப்பந்து போட்டிகளில் கலந்துகொள்வதற்காக வடமாகாணத்திலிருந்து முதன் முறையாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யோகநாதன் சிம்ரோன் என்ற 22 வயதுடைய இளைஞர் கலந்துகொள்கிறார். சிறுவயதிலிருந்து கூடைப்பந்து விளையாட்டில் ஆர்வமுடைய இந்த இளைஞர், பல்வேறுபட்ட போட்டிகளில் கலந்துகொண்டுள்ளதுடன், இலங்கையில் தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணியின் பிரதித் தலைவராகவும் செயற்பட்டுள்ளார்.

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை முதன்முறை கூடைப்பந்தில் போட்டியிடுவதாகவும், அதில் கலந்துகொள்ளும் முதலாவது தமிழ் இளைஞன் இவரென்பதும் குறிப்பிடத்தக்கது. யோகநாதன் சிம்ரோன் கடந்த ஐந்து வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் தொடர்ந்து விளையாடி வருவதுடன், மட்டக்களப்பில் நடத்தப்பட்ட தேசிய போட்டிகளில் வெற்றியையும் தனதாக்கிக்கொண்டுள்ளார்.

குறித்த இளைஞர், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலையில் கல்விகற்றதுடன், இவருக்கான பயிற்சியாளராக ஆரம்பம்முதல் ஜெயபாலன் ஜெசந்தன் செயற்பட்டு வருகிறார்.

# பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய இலக்கை நிர்ணயித்த இலங்கை

### இன்னும் 9 விக்கெட்டுகளை வீழ்த்தினால் இலங்கைக்கு வெற்றி




சுற்றுலா பாகிஸ்தான் அணிக்கும், இலங்கை அணிக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் நான்காவது நாள் ஆட்டம் நேற்று நிறைவுக்கு வந்தது. பாகிஸ்தான் அணி வெற்றிபெறுவதற்கு இன்னும் 9 விக்கெட்டுகள் கைவசமிருக்கும் நிலையில் 419 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலை காணப்படுகிறது.

மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 323 ஓட்டங்கள் முன்னிலை வகித்த இலங்கை அணி நேற்றைய நாளில் சிறந்த துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. தனஞ்ஜய டி சில்வா சதம் கடந்து 109 ஓட்டங்களை குவித்தார். இலங்கை அணி இரண்டாவது இன்னிங்ஸில் மொத்தமாக 360 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் தங்களது இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொண்டது.

அதனடிப்படையில் பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இலக்காக 508 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. குறித்த இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி நேற்று நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 89 ஓட்டங்கள் சேர்த்தது.

போதிய வெளிச்சம் இன்மை காரணமாக நேற்றைய நாள் ஆட்டம் முன்னதாகவே நிறைவுக்கு வந்த நிலையில், இன்றைய நாள் வெற்றியாளரை தீர்மானிக்கும் நாளாக காணப்படுகிறது. எனவே, ஐந்தாம் நாள் ஆட்டம் சரியாக காலை 9.45 மணிக்கு காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7